பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி
VALAMPURI

ரூபா 5-00

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 28 சனிக்கிழமை (14-10-2000) தொ. பேசி;- 3378 ஒலி: 299

உள்ளே

க.பொ.த.(சா.த) மாணவருக்கான

சமூகக்கல்வி

★ அலரி மாளிகையில் நேற்று

# ரட்ணசிறி விக்கிரமநாயக்கா பிரதமராகப் பதவி ஏற்றார்!

## விரைவில் அமைச்சரவை அமைக்கப்படும்

(நமது நிருபர்)

இலங்கையின்பதினோராவது பாராளுமன்றத்தின் பதின்னான்காவது பிரதம மந்திரியாக இரட்ணசிறி விக்கிரமநாயக்கா நேற்று மாலை அலரி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

தேசிய ஐக்கிய முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், ஈழமக்கள் ஜனநாயக கட்சி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன இணைந்து பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்கும் என்ற உறுதிப்பாட்டையடுத்தே ஜனாதிபதி இரட்ணசிறிவிக்கிரமநாயக்காவுக்கு ஆட்சியமைக்க அழைப்பு விடுத்திருந்தார்.

1994 ஆம் ஆண்டு தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி, அரசு அமைத்ததைத் தொடர்ந்து தற்போது ரட்ணஸ்ரீ விக்கிரமநாயக்க பொது ஜன ஐக்கிய முன்னணியின் மூன்றாவது பிரதமமந்திரியாக பதவியேற்

(8ஆம் பக்கம் பார்க்க)

## இருசடலங்கள் ஒப்படைப்பு

[வவுனியா]

செட்டிகுளம் கஜபாகுபுர என்னும் இடத்தில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் இரு இளைஞர்கள் கொல்லப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த இரு இளைஞர்களினது சடலங்களும் அடையாளம் காணும் பொருட்டு வவுனியா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.(வ)

## சணவனின் சமாதிக்கருகில் ஸ்ரீமாவின் பூதவுடல் இன்றுஅடக்கம்



ஹொரகொல்லையில் உள்ள அமரர் எஸ். டபிள் யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் சமாதிக்கு அருகில் உலகின் முதலாவது பெண் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் பூதவுடல் இன்று மாலை அடக்கம் செய்யப்படவுள்ளது.

மரணத்தின் பின், தனது உடலை ஹொரகொல்லையில் உள்ள தனது கணவர் அமரர் எஸ்.டபிள் யு.ஆர். டி. பண்டாரநாயக்காவின்

(8ஆம் பக்கம் பார்க்க)

★ தூதுவர் எரிக்சோலுடன பேச்சு நடத்த

# அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் நோர்வேக்குப் பயணமானர்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் நேற்று நோர்வேயின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக்சோலுடன்முடிந்த இலங்கை இனப்பிரச்சினை குறித்து பேச்சு நடத்தியுள்ளார்.

பாராளுமன்றத் தேர்தல் கையோடு அவசர அவசரமாக அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் நோர்வேக்குச் சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளமை ஒரு முக்கிய திருப்பமாக அமையலாமென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந-2)

## புனர்வாழ்வு அமைச்சர்பதவி டக்ளஸ்தேவானந்தாவுக்கு?

(கொழும்பு)

ஆட்சியமைக்கவுள்ளபொது ஜன ஐக்கிய முன்னணியின் அமைச்சரவையில் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு கப்பல் துறைமுக அமைச்சு வழங்கப்படவுள்ளதாக கொழும்புஅரசியல்வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் நான்கு ஆசனங்களும் அம்பாறையில் ஒரு ஆசனமுமாக ஐந்து ஆசனங்களைப் பெற்ற ஈ.பி.டி.பிபொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியமைப்புக்கு ஆதரவாகவுள்ளது.

இதனால் காலஞ் சென்ற அமைச்சர் அஷ்ரப் வகித்த

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக மாணவன் படையினரால் விசாரிக்கப்பட்டார்

[யாழ்ப்பாணம்]

யாழ்.பல்கலைக்கழகமாணவர் ஒருவர் நேற்று இராணு

ளார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட 3 ஆம் வருட

★ பாராளுமன்றத்தில் மீண்டும்

[யாழ்ப்பாணம்]
யாழ். பல்கலைக்கழகமாண வர் ஒருவர் நேற்று இராணு வத்தினரால் சுமார் 6 மணித் தியாலங்கள் தீவிர விசார ணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.
யாழ். பல்கலைக்கழக கலைப்பீட 3 ஆம் வருட மாணவனாகிய பரமானந்தம் அகிலேஸ்வரன் [வயது25]
(8ஆம் பக்கம் பார்க்க)

# முன்னாள் யாழ். மாவட்ட இராணுவத்தளபதி சரத்முனசிங்க எம். பி. ஆனார்

[கொழும்பு]
யாழ். மாவட்ட முன்னாள் இராணுவத் தளபதியும், இராணுவப்பேச்சாளருமான பிரிகேடியர் சரத் முனசிங்க எம். பியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
பொது ஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டே சரத்முனசிங்க பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (ந)

★ பாராளுமன்றத்தில் மீண்டும்

# தீர்வுத்திட்டத்தைக்கொண்டுவந்தால் மக்கள் மூலம் புரட்சி செய்வேன்

## கண்டி மகாநாயக்க தேரர் சவால்

(கொழும்பு)
கடந்த ஆகஸ்ட் மாதம் பாராளுமன்றத்தில்முன்வைத்துள்ள தீர்வுத்திட்டத்தை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு மீண்டும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தால் மக்களைத் திரட்டி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை தலைமை தாங்கி நடத்துவேன்.
இவ்வாறு கண்டி மல்வத்த பீட மகாநாயக்கர் ரம்புக்கெல விபசி தேரர் கூறியுள்ளார்.
நேற்றைய தினம் பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசிய அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் கடந்த தேர்தலில் ஊழல், அநீதி இடம் பெற்றுள்ளது. இதை ஆளுங் கட்சியே செய்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (ந)

ஐ. தே. கட்சி ஆட்சியமைக்க

# ரெலோவிடம் ஆதரவு கேட்டு டாக்டர் ஜெயலத் தூது சென்றார்

(வவுனியா)
ஐக்கிய தேசியக்கட்சிபாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா நேற்று வன்னியில் ரெலோவின் தலைவர்களைச் சந்தித்து ஒருமணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.
இச்சந்திப்பின் போது ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு வழங்குமாறு அவர் கேட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.
ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்குவதற்கு ரெலோ அமைப்பு நான்கு நிபந்தனைகளை விதித்துள்ளது.
★ யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
★ பேச்சு வார்த்தைக்குரிய ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
★ இனப்பிரச்சினை தொடர்பாக மூன்றாம்தரப்பு
(8ஆம் பக்கம் பார்க்க)

# அதிகூடிய விருப்பு வாக்குகள் சஜித் பிரேமதாஸாவுக்குக் கிடைத்தது

(கொழும்பு)
நடந்து முடிந்த பொதுத் தேர்தலில்அம்பாந்தோட்டை மாவட்டத்தில் காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவின் மகன்சஜித் பிரேமதாஸாவுக்கே அதிகூடிய விருப்பு வாக்குகள் கிடைத்துள்ளது.
அம்பாந்தோட்டை மாவட்டத்தில் திசமாரகம தொகுதியில் சஜித் பிரேமதாஸாவுக்கு 91 வீதமான விருப்பு வாக்கு
(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாள்தழ

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நூலகத்துறை

## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பூரட்டாதி நட்சத்திரம் 1968 ஆம் ஆண்டு பிறந்த சொந்தமாக வியாபாரம் செய்யும் மணமகனுக்கு சைவ போசன குடும்பத்தைச் சேர்ந்தவராக மணமகளை பெற்றோர் எதிர் பார்க்கின்றனர். சகல விபரங்களுடனும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மே/பா விளம்பர இல:- 116 வலம்புரி. (1827)

## சிறுமி மரணம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பின்இரணைப் பாலையை சேர்ந்த பத்து வயது சிறுமியொருவர் விஷம் தீண்டி உயிரிழந்துள்ளார்.

நேற்று புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போதே 5ம் வட்டாரம் புதுக்குடியிருப்பு இரணைப் பாலையைச் சேர்ந்த யோகராஜ் மிதுனா எனும் சிறுமி மரணமடைந்துள்ளார்.

மேற்படி சிறுமி விஷம் தீண்டியது அறியாது வயிற்றுவலியென்று கூறியே வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்ததாகக் கூறப்படுகிறது. (த)

## மரக்கறி விலைஉயர்வு

மரக்கறிகளின் விலை தற்போது வெகுவாக அதிகரித்துள்ளது. மழைகாலம் ஆரபித்ததும் சந்தைகளில் மரக்கறிகளின் விலை உயர்வடைந்துள்ளது.

கத்தரிகிலோ 50 ரூபாவாகவும் பயிற்றங்காய்கிலோ 40 ரூபாவாகவும் உருளைக்கிழங்கு கிலோ 80 ரூபாவாகவும்ச்சைமிளகாய் கிலோ 70 ரூபாவாகவும் விலை உயர்ந்துள்ளது.

அத்துடன் ஒருபிடி கீரை 10 ரூபாவாக விற்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (செ-106)

## கார்-மோட்டார் சைக்கிள் விபத்து காயங்களுடன் இளைஞன் ஆஸ்பத்திரியில்

### புலோலி சாரையடியில் சம்பவம்

(புலோலி)

புலோலி சாரையடியில் நேற்று முன்தினம் கார், மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியதில் 4 ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த தவராசா கெலின் தவக்குமார் (வயது-26) என்பவர் படுகாயத்திற்குள்ளானார்

இந்தநபர் சிகிச்சைக்காக பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த-43)

## வயிற்றோட்டம் சிறுவன் பலி

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பத்தினி மலைபகுதியில் வயிற்றோட்டம் காரணமாக 6 வயது குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

கற்சிலைமடுவில் வசித்து வந்த க.தவயோகன் எனும் குழந்தையே மேற்படி நோயால் மரணமடைந்துள்ளது. (த)

## இன்று சனி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

வாக்கியப் பஞ்சாங்கப்படி இன்று சனிக்கிழமை (14.10.2000) நள்ளிரவு 12 மணி05 நிமிடமளவில் சனி பகவான் இடபராசியிலிருந்து மேடராசிக்கு வக்கிர மாற்றமடைகின்றார்.

மேடராசியில் சனிபகவான் 06 மாதங்கள் வரை சஞ்சரித்த பின் மீண்டும் 11.4.2001 இல் இடபராசிக்கு மாற்றமடைவார் யுத்தக் கிரகம் செவ்வாயின் வீட்டில்(மேடத்தில் 6மாதங்கள் வரை சனி நீச வக்கிர சஞ்சாரஞ் செய்வது நாட்டிற்கு நன்மையல்ல என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## முத்திரைக்கு தட்டுப்பாடு

யாழ். குடா நாட்டில் முத்திரைகள் மற்றும் கடித உறைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

தேர்தல் பணிகளை முன்னிட்டு யாழ் குடா நாட்டிற்கான முத்திரைகள் கடித உறைகள் அனுப்பி வைக்கப்படவில்லை என தெரியவருகின்றது.

இன்னும் இரண்டொரு வாரங்களில் இவைகள் யாழ் குடாநாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டு விடுமென தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-12)

## சுட்டுக்கொலை

இருவேறு ஒலிம்பிக்போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற குரொஷ்யாநாட்டு விளையாட்டு வீரர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கனோஜெஸ்ட் மடிஜா எட்யுபெக் என்ற இவ் வீரர் மொன்றியல் மற்றும் லொஸ் ஏன்ஜல்ஸ் ஆகிய இடங்களில் நடைபெற்ற ஒலிம்பிக்போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

குடும்பச் சச்சரவு காரணமாக ஏற்பட்ட குரோத உணர்வால் மைத்துனரே இவரைச் சுட்டுக் கொன்றிருப்பதாகவிசாரணைகளின் மூலம்தெரியவந்துள்ளது. [உ]

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ்.குடா நாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேசசெயலர் பிரிவு ரீதியாக தரப்படுகின்றது.

### சங்கானை

| | |
|---|---|
| 158652 ஏ | 158652 பி |
| 160448 ஏ | 160463 ஏ |
| 160463 பி | 160463 சி |
| 160769 ஏ | 161571 ஏ |
| 161171 பி | 161571 சி |
| 151582 ஏ | 161582 பி |
| 161682 சி | 161607 ஏ |
| 161607 பி | 161607 சி |
| 161607 டி | 161615 ஏ |
| 161615 பி | 161615 சி |
| 161637 ஏ | 161637 பி |
| 161760 ஏ | 161760 பி |
| 161760 சி | 161760 டி |
| 161760 ஈ | |
| 161760 எல் | 161794 ஏ |
| 161794 பி | 161826 ஏ |
| 161841 ஏ | 161841 பி |
| 161841 சி | 161974 ஏ |
| 161974 பி | 163889 ஏ |
| 163889 பி | 163893 ஏ |
| 163893 பி | 163893 சி |
| 164093 ஏ | 164093 பி |
| 164270 ஏ | 164270 பி |
| 163270 சி | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 145383 ஏ | 150891 ஏ |
| 150891 பி | 150891 சி |
| 154542 ஏ | 156828 ஏ |
| 156828 பி | 156829 ஏ |
| 156829 பி | 156829 சி |
| 156829 டி | 157321 ஏ |
| 157321 பி | 157321 சி |
| 157321 டி | 157370 ஏ |
| 157370 பி | 157385 ஏ |
| 157385 பி | 157386 ஏ |
| 157668 ஏ | 159765 ஏ |
| 159781 ஏ | 159781 பி |
| 159781 சி | 159781 டி |
| 159781 ஈ | 159781 எவ் |
| 159793 ஏ | 162564 ஏ |
| 162590 ஏ | 162590 பி |

| | |
|---|---|
| 156754 ஏ | 156756 பி |
| 156782 ஏ | 157368 ஏ |
| 157368 பி | 157368 சி |
| 157368 டி | 157368 ஈ |
| 157377 ஏ | 157377 பி |
| 157377 சி | 157377 டி |
| 157382 ஏ | 157382 பி |
| 157382 சி | 157582 டி |
| 157504 ஏ | 157504 பி |
| 157504 சி | 157525 ஏ |
| 15 534 ஏ | 157534 பி |
| 157534 சி | 157566 ஏ |
| 157566 பி | 157566 சி |
| 157579 ஏ | 157579 பி |
| 157579 சி | 157584 ஏ |
| 157584 பி | 157584 சி |
| 157585 ஏ | 157589 ஏ |
| 162783 ஏ | 162783 பி |
| 146437 ஏ | 146437 பி |
| 146437 சி | 157951 ஏ |
| 157951 பி | 160512 ஏ |
| 160646 ஏ | 160646 பி |
| 160850 ஏ | 160896 ஏ |
| 160896 பி | 161719 ஏ |
| 161719 பி | 161719 சி |
| 161719 டி | 161827 ஏ |
| 161827 பி | 161827 சி |
| 161827 டி | 161846 ஏ |
| 161846 பி | 161846 சி |
| 161846 டி | 161846 ஈ |
| 163924 ஏ | 164026 ஏ |
| 164026 பி | 164070 ஏ |
| 164070 பி | 164122 ஏ |
| 164142 ஏ | 164378 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 135513 ஏ | 147084 ஏ |
| 155487 ஏ | 155487 பி |
| 158701 ஏ | 158701 பி |
| 158701 சி | 160461 ஏ |
| 160461 பி | 160461 சி |
| 160461 டி | 160461 ஈ |
| 160558 ஏ | 160558 பி |
| 160558 சி | 160656 ஏ |
| 160923 ஏ | 160923 பி |
| 160923 சி | 160923 டி |
| 161572 ஏ | 161572 பி |
| 161612 ஏ | 161612 பி |
| 161651 ஏ | 161651 பி |
| 161651 சி | 161651 டி |
| 161651 ஈ | 161651 எவ் |
| 161740 ஏ | 161817 ஏ |
| 161854 ஏ | 161854 பி |
| 161857 ஏ | 151863 சி |

| | |
|---|---|
| 161886 பி | 161894 ஏ |
| 161894 பி | 161948 ஏ |
| 161948 பி | 161958 ஏ |
| 164076 ஏ | 164076 பி |
| 164090 ஏ | 164090 பி |
| 164092 ஏ | 164325 ஏ |
| 164374 ஏ | 164374 பி |
| 164374 சி | 164374 டி |
| 164374 ஈ | 164387 ஏ |
| 164387 பி | 164003-ஏ |
| 164003 பி | |

### உடுவில்

| | |
|---|---|
| 157197 ஏ | 157197 பி |
| 157197 சி | 157227 ஏ |
| 157227 பி | 157227 சி |
| 157227 டி | 157227 ஈ |
| 157227 எவ் | 57227 ஜி |
| 162747 ஏ | 162808 ஏ |
| 162809 ஏ | 162809 பி |
| 162887 ஏ | 162887 பி |
| 163010 ஏ | 157750 ஏ |
| 157750 பி | 158971 ஏ |
| 160481 ஏ | 160499 ஏ |
| 160499 பி | 160499 சி |
| 160500 ஏ | 160526 ஏ |
| 160560 ஏ | 160560 பி |
| 160782 ஏ | 160782 பி |
| 160800 ஏ | 160800 பி |
| 160800 சி | 160800 டி |
| 160800 ஈ | 161541 ஏ |
| 171757 ஏ | 161757 பி |
| 161807 ஏ | 161811 ஏ |
| 16 828 ஏ | 161838 பி |
| 161828 சி | 161828 டி |
| 163947 ஏ | 163957 ஏ |
| 163994 ஏ | 163994 பி |
| 163994 சி | 164128 ஏ |
| 164128 பி | 164130 ஏ |
| 164130 பி | 164138 ஏ |
| 164138 பி | |

(சு)

| | |
|---|---|
| 164356 பி | 164357 ஏ |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 160625 ஏ | 160625 பி |
| 160625 சி | 160625 டி |
| 160867 ஏ | 160867 பி |
| 160905 ஏ | 160905 பி |
| 161701 ஏ | 161752 ஏ |
| 161814 ஏ | 161815 ஏ |
| 161945 ஏ | 161945 பி |

ஒக்டோபர் மாதம் 09 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்குப் பயணம்செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேசவாரியாகத் தரப்படுகின்றது.

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 163970 பி | 163970 சி |
| 163974 ஏ | 163974 பி |
| 163977 ஏ | 163979 ஏ |

## முதலாமாண்டு நீங்காத நினைவில்



| | |
|---|---|
| 159781 சி | 159781 டி |
| 159781 ஈ | 159781 எவ் |
| 159793 ஏ | 162564 ஏ |
| 162590 ஏ | 162590 பி |
| 162590 சி | 162590 டி |
| 162607 ஏ | 162647 ஏ |
| 162647 பி | 162650 ஏ |
| 162682 ஏ | 162682 பி |
| 162692 ஏ | 162692 பி |
| 162756 ஏ | 162756 பி |
| 162758 ஏ | 162759 ஏ |
| 162773 ஏ | 162773 பி |
| 162778 ஏ | 162778 பி |
| 162778 சி | 162778 டி |
| 162778 ஈ | 162778 எவ் |
| 162878 ஏ | 163018 ஏ |
| 163828 ஏ | 163828 பி |
| 163918 பி | |

**நல்லூர்**

| | |
|---|---|
| 147722 ஏ | 147722 பி |
| 147723 ஏ | 156719 ஏ |

| | |
|---|---|
| 161651 ஈ | 161651 எவ் |
| 161740 ஏ | 161817 ஏ |
| 161854 ஏ | 161854 பி |
| 161857 ஏ | 151863 சி |
| 161865 ஏ | 161910 ஏ |
| 161940 ஏ | 163901 ஏ |
| 163901 பி | 163920 ஏ |
| 163920 பி | 163933 ஏ |
| 163935 ஏ | 163935 பி |
| 163968 ஏ | 163968 பி |
| 163973 ஏ | 163973 பி |
| 163995 ஏ | 163995 பி |
| 163997 ஏ | 164008 ஏ |
| 164008 பி | |

**தெல்லிப்பழை**

| | |
|---|---|
| 157394 ஏ | 157449 ஏ |
| 155468 ஏ | 158658 ஏ |
| 158818 ஏ | 158818 பி |
| 161591 ஏ | 161802 ஏ |
| 161802 பி | 161802 சி |
| 161875 ஏ | 161875 பி |
| 161875 சி | 161886 ஏ |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 163970 பி | 163970 சி |
| 163974 ஏ | 163974 பி |
| 163977 ஏ | 163979 ஏ |
| 163979 பி | 163979 சி |
| 163979 டி | 163979 ஈ |
| 163999 ஏ | 164043 ஏ |
| 164079 ஏ | 164079 பி |
| 164087 ஏ | 164095 ஏ |
| 164379 ஏ | 164379 பி |
| 164379 சி | |

**உடுவில்**

| | |
|---|---|
| 158540 ஏ | 158540 பி |
| 158540 சி | 158728 ஏ |
| 158728 பி | 158855 ஏ |
| 158855 பி | 158855 சி |
| 160757 ஏ | 160757 பி |
| 160815 ஏ | 160815 பி |
| 160815 சி | 161542 ஏ |
| 161616 ஏ | 161616 பி |
| 161689 ஏ | 161689 பி |
| 161693 ஏ | 161693 பி |
| 161694 ஏ | 161694 பி |
| 161704 ஏ | 161704 பி |
| 161707 ஏ | 161707 பி |
| 161707 சி | 161754 ஏ |
| 161796 ஏ | 161837 ஏ |
| 161849 ஏ | 161852 ஏ |
| 161852 பி | 161880 ஏ |
| 161885 ஏ | 161885 பி |
| 161885 சி | 161963 ஏ |
| 161963 பி | 161965 ஏ |
| 161965 பி | 161965 சி |
| 163891 ஏ | 163891 பி |
| 163891 சி | 163894 ஏ |
| 163895 ஏ | 163944 ஏ |
| 163944 பி | 164309 ஏ |
| 164320 ஏ | 164320 பி |
| 164352 ஏ | 164356 ஏ |


## டைனமோ தேவை

**20 கே. வி. வலுவுள்ள 3 பேஸ்**

டைனமோ உடன் தேவை

விற்பனைக்கு வைத்திருப்போர் நேரில்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**'வலம்புரி'**

**இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்**




தோற்றம்: 08 - 05 - 1927

நிறைவு: 26 - 09 - 1999

**மாவை**

## அமரர் மரியான் கிருஷ்ணன்

(கிளேக்கட்டர் இயக்குநர் சீ. கூ. தாபனம்
உரிமையாளர்: ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ சேவிஸ்)

மன்னாதி மன்னரெல்லாம் மதிக்கும் மதியுடையாய்
மாநிலத்தில் மாண்புறவே மைந்தரைஏற்றியமாமனிதா
எப்பாலும் ஏற்றும் இனியவரே அப்பா!
மனமொளிர சிரித்தொளிரும் நின் முகத்தை
மாநிலத்தில் காண்பதெப்போ...?

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பாடசாலை வீதி,
மல்லாகம்.
(1828)

**மனைவி, மக்கள்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**உற்றார், உறவினர்**

# ஆட்சி அமைப்பது சாத்தியம் இல்லை

# விரக்தியின் விளிம்பில் ரணில்

## கொழும்பு பத்திரிகை தகவல்

(கொழும்பு)

எனது ஆட்சியமைக்கும் முயற்சி பலன்தராது. அதற்காக நான் ஏன் வீணே பாடுபடவேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க விரக்தி வெளியிட்டுள்ளதாககொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ஆட்சியமைக்கத் தேவையான ஆசனங்களை ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி பெறாத போதிலும் ஆட்சியமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு அது தோல்வியடைந்த நிலையில் விரக்தியின் விளிம்பில் நின்று ரணில் இதனைக் கூறியிருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் சிலர் விமர்சித்துள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஈ.பி.டி.பி. யின் ஆதரவுடன் புதிய அரசமைக்கும் எனும் உறுதியான தகவல்கள் வெளியான பின்பும் ஈ.பி.டி.பி. அமைப்பை தம்பக்கம் ஈர்த்து ஆட்சியமைக்கும் ஆசையில் ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

எனினும் நேற்று முன் தினம் ஈ.பி.டி.பி. யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியை சந்தித்து ஆட்சியமைப்பது தொடர்பாக உரையாடிய தன் பின்பு ரணிலின் அபிலாசைகள் தோல்வியுற்றிருப்பதாகவும் செய்தியாளர்கள் தமது கருத்தினை வெளிப்படுத்தியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, ரெலோ இயக்க பிரமுகர் செல்வம் அடைக்கலநாதனிடம், ஆட்சியமைக்க ரணில் உதவி கோரிய போதும் அம்முயற்சியும் தோல்வியில் முடிந்துள்ளது.

அத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்களுடன் ஐக்கிய தேசியக்கட்சி முக்கியஸ்தர்கள் அரசமைப்பது தொடர்பாக உதவி கோரிய போது அவர்கள் சில நிபந்தனைகள் விதித்த தன் பேரில் அவற்றை நிறைவேற்ற முடியாத நிலையில் அம் முயற்சியும் கைகூடாமல் போனது.

இந்நிலையில் ரணில் தனது ஆட்சி பீடமேறும் ஆசையினை மூட்டைகட்டிவைத்து இயலா நிலையில் நின்று பேசுவதாக அரசியல் விமர்சகர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (உ)

# சிறுவர் பாதுகாப்புநிதியம்

# இடம்பெயர்ந்தோருக்கு பெரும்சேவை

## - மாவட்ட இணைப்பாளர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சேவையாற்றிவருகின்ற ஐக்கிய இராச்சியத்தைத் தலைமையகமாகக் கொண்டுள்ள சர்வதேச அரசசார்பற்ற நிறுவனமாகிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் இவ்வருடம் ஏப்ரல் முதல் செப்ரெம்பர் மாதம்வரை 2005 குடும்பங்களைச் சேர்ந்த9394 உறுப்பினர்களுக்கும் 4442 சிறுவர்களுக்கும் உணவுப் பொருட்கள் அல்லாதவற்றை இடம்பெயர்வு காலத்தில் அன்பளிப்பாக வழங்கிஉள்ளதாக மேற்படி நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் திருமதி. விபி கனாட் தெரிவித்துள்ளார்.

தமது அமைப்பின் அண்மைக்கால செயல்பாடுகள் பற்றி அவர் எமது செய்தியாளரிடம் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் 1985ம் ஆண்டு முதல் யாழ். மாவட்ட மக்களுக்கான சேவையில் ஈடுபட்டு வந்துள்ளது. ஆரம்பகாலம் முதல் சிறுவர் மேம்பாட்டுத் திட்டங்களை மையப்படுத்தி வந்துள்ளது.

இவ்வருடம் ஏப்பிரல்மாதம் இடம்பெற்ற இடம்பெயர்வினைத்தொடர்ந்து, சங்கானை தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவுகளில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கு பல்வேறுபட்ட உதவிகளை வழங்கியுள்ளது.

இவற்றில் 3137 பாடசாலை செல்கின்ற மாணவர்களுக்கான கல்விஉபகரணங்கள் பொதிகளையும் 12 வயதுக்குட்பட்ட 2394 சிறுவர்களுக்கு சீருடைகளையும். பாடசாலைகள் செல்கின்ற நிலையில் இருக்கும் 200 மாணவர்களுக்கு லாம்புகளையும், பிள்ளைகளுக்கான பொருட்களை 347 பேருக்கும், பிறந்த குழந்தைகளுக்கு 156 நுளம்புவலைகளையும், 21 மழலைகள் கல்விப்பூங்கா ஆசிரியர்களுக்கான முன்பள்ளித் திட்டம் தொடர்பான பொதிகளையும் வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன் ஆகஸ்ட் மாதப் பகுதியில் சிறுவர்உரிமைகள் பற்றிய விளக்கங்களை உள்ளடக்கிய 12 ஆயிரத்து 500 பிரசுரங்களையும், சங்கானை பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுகளில் இடம்பெயர்ந்த நிலையில் இருக்கும் சமூகங்கள் மத்தியில் பத்து சிறுவர்கழகங்களை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டமையும் அவர் சுட்டிக் காட்டினார்.

யாழ். குடாநாட்டில் பல்வேறு செயல்திட்டங்களை பல நிறுவனங்களுடன் இணைந்து அமுல் செய்வதில் மிகவும் ஆர்வமுடன் பணியாற்றிய இவர் இம்மாதம் 18ம் திகதி முதல் யாழ். குடாநாட்டுச் சேவையைப் பூர்த்தி செய்து ஐக்கிய இராச்சியத்துக்குப் பயணமாகவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-77)

## ஆட்சி மாற்றத்திற்கு

இன்று புரட்டாதி மாத இறுதிச் சனிக்கிழமையை ஒட்டி இத் தோத்திரம் பிரசுரமாகின்றது.

### சனீஸ்வரன் தோத்திரம்

காப்பு

தேவரெண் டிசைக்கதிபர் சித்தரொடு கிம்புருடர்
மூவர் முனிவர் முதலோரை - மேவியுறுந்
தாரணிந்த மார்பன் சனிபகவான் கதை புகலக்
காரணிந்த யானை முகன் காப்பு.

மஞ்சுதவழ் அயோத்தியில் வாழ் தசரதன்றன்
மக்களையும் வனவாசம் ஆக்கி வைத்தாய்
பஞ்சவர்கள் சூதினால் பதியிழந்து
பஞ்சு படும் பாடைவர் படச் செய்வித்தாய்

எஞ்சலிலா அரிச்சந்திரன் பெண்டை விற்றே
இழிகுலத்தி லடிமையுற இசைய வைத்தாய்
தஞ்சமென வுனைப் பணிந்தேன் எனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே.

## யாழ்- பல்கலையில் இன்று திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புற நிலைப் படிப்புகள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள திரைப்படக்காட்சித் தொடரில் இன்று மு. ப 10, மணிக்கு பாரதிவாசுவின் ''பன்னீர் புஸ்பங்கள், வீடியோப் படக்காட்சி இடம்பெறவுள்ளது.

பல்கலைக் கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி வீடியோ காட்சியில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்தெரிவித்துள்ளார், (த)

## பஸ்சேவை

(தென்மராட்சி)

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையினால் முன்னர் கொடிகாமம் வரை நடத்தப்பட்ட பஸ்போக்குவரத்துச் சேவை தற்போது வரணி வரையுமே நடத்தப்பட்டு வருகின்றது. (க-77)

## வழமைக்கு திரும்பும் கொழும்பு

தேர்தல் பதற்றம் நீங்கி, நேற்று முதல் கொழும்பு நகர் வழமை நிலைக்குத் திரும்பியிருப்பதாக தெரியவந்துள்

## இராசி பலன்

14-10-2000
(புரட்டாதி 28, சனி)
பிரதமை
பி.ப 2.27 வரை
அச்சுவினி
மு.இ 10.04 வரை
ராகுகாலம்
9.02- 10.32
சுபநேரம் 3.02- 4.32
சித்தம்

**மேடம்**
நினைத்த காரியம் கைகூடும், புதியசிந்தனை, ஆரோக்கியம், பிரயாணம்.

**இடபம்**
பிரயாண அலைச்சல், காரியம் தாமதம், சயன சுகக் குறை, தனவிரயம்.

**மிதுனம்**
தனலாபம், குடும்ப சுகம், கௌரவம் கிடைத்தல், காரிய ஜெயம்.

**கடகம்**
காரிய நன்மை, தொழில் அதிகாரம், அதிகாரிகள் சந்திப்பு.

**சிங்கம்**
நிலைக்கேடு, மனக்கவலை, ரோகம், உறவினர் வருகை, பிரயாணம்.

**கன்னி**
உறவினர் வெறுப்பு, காரியம் தாமதம், திருவியாதி

ஆட்சி மாற்றத்திற்கு

# சகல தமிழ் கட்சிகளுநர்பூரண ஆதரவு வழங்க வேண்டும்

## மலையக மக்கள் முன்னணி தலைவர் வேண்டுகோள்

(கொழும்பு)

தமிழ் மக்களின் இன்றைய தேவையை உணர்ந்து சகல தமிழ்க் கட்சிகளும் ஆட்சி மாற்றத்துக்கான செயற்பாட்டில் ஒன்றிணைய வேண்டும் என,மலையக மக்கள் முன்னணி தலைவர் பி.சந்திரசேகரன்சகல தமிழ்கட்சிகளுக்கும் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் அவ்வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

இப்போதைய பொதுத் தேர்தல் முடிவுகள் அடுத்த ஒரு அரசாங்கத்தை அமைப்பதற்கு தமிழ் கட்சிகளுக்குள்ள செல்வாக்கினை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

கடந்த ஆறு வருட காலமும் யுத்தத்தினால்,என்றுமில்லாதவாறு தமிழ் மக்கள் தமது இயல்பு வாழ்க்கையை இழந்து தவிக்கின்றனர்.

தற்போதைய அரசியல் சூழலில் நாட்டில் அரசியல் மாற்றம் ஒன்று ஏற்படுவது தமிழ்மக்களின் எதிர்காலத்தில் ஏதாவது திருப்பத்தை ஏற்படுத்தக் கூடும்.

இதனை மனதில் கொண்டு தமிழ் மக்களின் எதிர் காலத்தை தீர்மானிக்கின்ற வரலாற்றுக்கடமை சகல தமிழ்க்கட்சிகளுக்கும் உண்டு.

அரசின் தயவில் உயிர்வாழும் நிலையில் தமிழ் கட்சிகள் உள்ளன என்ற தமிழ் மக்களின் விமர்சனத்தைப் பொய்ப்பிக்கக் கூடிய அரிய வாய்ப்பு சகல தமிழ் கட்சிகளுக்கும் தற்போது கிடைத்திருக்கிறது எனவும் தெரிவித்துள்ளார். (உ)

# முத்தையன்கட்டு குளம் எவ்வேளையிலும் உடைக்கும் அபாயம்

வன்னியில் தொடரும்பெருமழை காரணமாக முத்தையன்கட்டு குளம் எவ்வேளையிலும் உடைக்கும் அபாய நிலை எழுந்துள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேற்படி குளம் வன்னியின் விவசாய திட்டங்களிற்கு பெரும் பங்களிப்பினை வழங்குகின்றது.

இக்குளம் முன்னைய காலங்களிலும் நீர்மட்டம் உயர்ந்து வான் பாய்வது வழமையான நிகழ்வு என்றும் இதனால் விவசாயச்செய்கை பாதிக்கப்படுவதுடன் போக்குவரத்துக்கள் தடைப்பட்டு பொது மக்கள் பெரிதும் சிரமமுறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முதல் கொழும்பு நகர் வழமை நிலைக்குத் திரும்பியிருப்பதாக தெரியவந்துள்ளது.

இருப்பினும், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் மரணத்தை யொட்டி நேற்றும் இன்றும் தேசிய துக்கதினங்களாகப் பிரகடனப்படுத்தப் பட்டிருப்பதை யொட்டி,ஆங்காங்கே அரைக்கம்பத்தில் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

பாதுகாப்பு ஏற்பாடுகள் விலக்கிக் கொள்ளப்பட்டிருப்பதாகவும், பொலிஸ் மற்றும் முப்படைகள் நேற்று முன்தினம் முதல் வில்க்கிக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எங்காவது விஷேட பாதுகாப்புதேவைப்படும் பட்சத்தில் மீண்டும் அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

---

**பிரமுகர்க..**

சுக்கள் நடத்தச்சென்ற நக்கீரன் ஆசிரியர் கோபால் மற்றும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழநெடுமாறன் ஆகியோர் இன்னமும் சத்தியமங்கலம்காட்டுப் பகுதியிலே வீரப்பன் ஆட்களின் வருகைக்காக காத்து நிற்பதாக தெரியவந்துள்ளது.

**கன்னி**

உறவினர் வெறுப்பு, காரியம் தாமதம், சிறுவியாதி, விரோதம்.

**துலாம்**

சுவாரஸ்யம்,போசனசுகம், தனவரவு, குடும்ப சுகம், பிரயாணம்.

**விருச்சிகம்**

சந்தோசமான செய்தி, முயற்சிகள் விருத்தி, சத்துரு ஜெயம்.

**தனுசு**

மனக்கிலேசம், சிறுவியாதி, புத்திரர்களால் கவலை, காரியம் ஜெயம்.

**மகரம்**

சுகக்குறைவு, உறவினர் நம்பிக்கையின்மை, நிலை மாறுதல்.

**கும்பம்**

பிரயாணம், சகோதரர் உதவி, தனவரவு, எடுத்த காரியம் கைகூடும்.

**மீனம்**

வாக்குக் கலகம், காரியத் தாமதம், இலட்சுமிகரம்.

(பழைய நேரப்படி கணிப் பிடப்பட்டது)

**வளவன்**

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை 2000

## வரலாறும் சமூகக்கல்வியும்

ஆக்கம் : மு.விக்னேஸ்வரன் B, A. (Dip-in-Edu)

### பகுதி-1

(நேற்றைய தொடர்ச்சி)

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**சரியான அல்லது மிகப்பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக**

21) முதலாளித்துவ நாடுகளிலிருந்து சோஷலிசநாடுகளில் வேறுபட்டுக் காணப்படும் முதன்மையான காரணிகளில் ஒன்று
1] நடை முறைப்படுத்தப்படும் கல்வி 2]சனத்தொகை வளர்ச்சி வீதம்
3] அந் நாட்டிலுள்ள பொருளாதார முறைமை
4] பயன்படுத்தப் படும் தொழில்நுட்ப முறை

22) இலங்கையின் கறுப்புத்தேயிலையைக் கூடுதலானளவு கொள்வனவு செய்யும் நாடு
1] பாகிஸ்தான், ஜப்பான், இந்தியா 2] மத்திய கிழக்கு நாடுகள்
3] ஆபிரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி 4] பிரித்தானியா, ரஷ்யா, கியூபா

23) வித்தியோதய வித்தியலங்கார பிரிவேனாக்களை ஆரம்பித்து வைத்தவர்
1] சிறி தர்மராமதேரர் 2] அநாகரிக தர்மபால
3] சிறி சுமங்கலதேரர் 4] டி. பி. ஜெயதிலக

24) இலங்கையில் செய்தி பரிமாறல் சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
1] 1832-1839 2] 1857-1858 3) 1947-1948 4] 1815-1818

25) அண்மையில் இலங்கை இராஜ தந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொண்ட நாடு
1] பூட்டான் 2] கியூபா 3] இஸ்ரேல் 4] சவூதி அரேபியா

26) பொஸ்ரன் தேநீர் விருந்து என்பது
1] அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தின் ஆரம்பம்
2] அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தின் முடிவு
3] பிரித்தானியாவுக்கும் பிரான்சுக்குமிடையே நடை பெற்ற விருந்து
4] அமெரிக்காவுக்கும் பிரித்தானியாவுக்குமிடையே நடை பெற்ற விருந்து

27) இலங்கை மக்கள் சமையலுக்காகப் பயன் படுத்தும் சக்தி வளம்.
1] மின்சாரம் 2] மண்ணெண்ணெய் 3] விறகு 4] உயிர்வாயு

28 இலங்கையின் இலவச பாடநூல், இலவச உடை வழங்கப்பட்ட ஆண்டு
1] 1947-1956 2] 1990-1983 3] 1980-1993 4] 1972-1978

29) ஆசியாவையும், வட அமெரிக்காவையும் பிரிக்கும் தொடு கடல்
1] ஜிப்றோல்ட தொடுகடல் 2] மேரிங் தொடுகடல்
3] குக் தொடு கடல் 4] ஈஜியன் தொடுகடல்

30) ஒப், ஜெனிசி, லீனா முதலிய நதிகள் பாய்கின்ற கண்டம்
1] அவுஸ்திரேலியா 2] ஆபிரிக்கா 3] ஐரோப்பா 4] ஆசியா

31) உலகில் கரும்புச் செய்கைக்கு பெயர் பெற்ற இடம்
1] பீரு 2] கியூபா 3] பிறேசில் 4] ரஷ்யா

32) இலங்கையில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட நதிப் பல நோக்குத்திட்டம்
1] உடவளவைத்திட்டம் 2] கல்லோயாத்திட்டம்
3] மகாவலித் திட்டம் 4] மாதுறு ஓயாத் திட்டம்

33) குறிப்பிட்ட ஓர் ஆண்டில் பிறேசில் பெருமளவு கோப்பியைக் கடலில் கொட்டியது இதற்கான காரணம்
1] அவ்வாண்டில் கோப்பியின் தரம் குன்றி சுவை கெட்டு விட்டது
2] கோப்பிச் செடியில் பங்கசுத்தாக்கம் ஏற்பட்டமை
3] சந்தையில் விலைத்தளம்பலைக் கட்டுப்படுத்தல்
4] உள் நாட்டுயுத்தம் காரணமாக மக்கள் கொண்ட அதிருப்தி

34) பின்வரும் விதப்புரைகளுள்சோல்பரி அரசியல் சீர்திருத்தத்துக்குமட்டும் பொருத்தமானது
1) சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை
2) இராஜகாரிய முறை நீக்கப்பட்டமை
3) மேல் சபை கீழ்சபை என இருசபைகளை உருவாக்கியமை
4) ஜனாதிபதி ஆட்சி முறைக்கு அத்திவாரமிட்டமை

# நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை எழுதுவினைஞர்கள் விசனம்

[கல்வயல்]

யாழ். செயலகத்தில்விசேட அடையாள அட்டைப் பிரிவில் தற்காலிகமாக எழுதுவினைஞர்களாக கடமையாற்றுபவர்களுக்கு இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

1996-ம் ஆண்டு இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 5 வருடங்களாக இங்கு கடமையாற்றி வரும் 21 பேருக்கே இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லையென த் தெரிவிக்கப்படுகின்றது,

(செ-111)

# புத்தளம் மாவட்டத்திற்கு எந்த பிரதிநிதித்துவமும் இல்லை

(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தில் 90 ஆயிரம் தமிழ், முஸ்லிம் வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், அம்மாவட்டத்தில் எந்தவொரு தமிழ் முஸ்லிம் உறுப்பினரும் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகவில்லை என தெரிவந்துள்ளது.

கடந்த 12 வருடங்களாக புத்தளம் மாவட்டத்தில் அந் நிலை காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலைமை தொடரும்பட்சத்தில் இப் பகுதி மக்களுடைய தேவைகள் பூர்த்தி செய்யப்படும் வாய்ப்பு குறைவாக இருக்கும் என்று பரவலாக கருத்து தெரிவிக்கப்படுகிறது.

(க-உ)

# கண்டியில் தொடரும் பதற்றநிலை இரவு நேர ஊரடங்கு அமுல்

(கொழும்பு)

கண்டி மாவட்டத்தில் தேர்தல் பதற்றங்கள் இன்னமும் நீங்கவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி பொலிஸ்மா அதிபர் மீது இனந்தெரியாத குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினையடுத்து அங்கு பாதுகாப்புப் படையினர் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இரவு வேளைகளில் கண்டி மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ)

# வெற்றிபெற்ற வேட்பாளருக்கு துப்பாக்கி வேட்டுக்களால் வரவேற்பு

## வழமைக்கு மாறான நிகழ்வாம்

(கொழும்பு)

நடைபெற்று முடிந்தபாராளுமன்றப் பொதுத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு துப்பாக்கி வேட்டு தீர்த்து மகிழ்ச்சி கொண்டாடிய சம்பவம் அண்மையில் கண்டியில் இடம்பெற்றது.

இவ் உறுப்பினர் கொழும்பிலிருந்து கண்டிக்கு தமது காரில் சொந்த ஊருக்கு திரும்பிக் கொண்டிருந்த போதே இவ்வாறான வழமைக்கு மாறான வரவேற்பு கிடைத்ததாம்.

இதுகுறித்து பொதுமக்கள் பலரும்வியப்பு வெளியிட்டுள்ளனர்.

(க)

## யா.சென்சாள்ஸ் பாடசாலை ஓடுகள்

# திருடியோர் என கருதப்படுவோர் தடுத்துவைப்பு; இருவர் அரச ஊழியராம்

(சுண்டுக்குளி)

யாழ். சென்சாள்ஸ் மகா வித்தியாலயஓடுகள் திருட்டுப் போனமைதொடர்பாக அரச ஊழியர் இருவர் உட்பட நால்வர் விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பட்ட நிலையில் லாண்ட் மாஸ்ரர் ஒன்றும் பொலிஸரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

குருநகர் வைத்தியசாலையின்சிற்றூழியர், அவருடைய மகன் மற்றும் மாநகரசபை சிற்றூழியர், லாண்ட்மாஸ்

3) மேல் சபை கீழ்சபை என இருசபைகளை உருவாக்கியமை
4) ஜனாதிபதி ஆட்சி முறைக்கு அத்திவாரமிட்டமை

35) போர்த்துக்கேயர் ஆட்சி காரணமாக இலங்கையில் ஏற்பட்ட விளைவுகளில் ஒன்று
1) றோமன் கத்தோலிக்க சமயம் பரவியமை
2) கறுவர்ச் செய்கையில் நாட்டம் ஏற்பட்டமை
3) ஏற்றுமதிப் பொருளாதாரம் உருவாகியமை
4) ரோமன் டச்சுச் சட்டம் அறிமுகப் படுத்தப்பட்டமை

36) கர்ண பரம்பரை வாயிலாகப் பேணப்பட்டு வந்த திரிபிடகத்தை பாயிரத்துடன் நூல் வடிவில் எழுது வித்த மன்னன்
1) தாதுசேனன் 2) வலகம்பா
3) முதலாம் விஜயபாகு 4) மகாசேனன்

37) இலங்கை கூடுதலாக உகைப்பு மழையைப் பெறுகின்ற காலம்
1) ஜூன் செப்ரெம்பர் 2) ஒக்ரோபர் டிசம்பர்
3) ஏப்ரல் செப்ரெம்பர் 4) மார்ச் ஒக்ரோபர்

38) சுதந்திரமாகப் பிறந்த மனிதன் சமமான உரிமைகளை அனுபவிப்பதற்கு உரித்துடையவன் இக் கூற்று பின்வருவனவற்றுள் எந்நிகழ்வோடு தொடர்புடையது
1) 1688 ஆங்கிலப் புரட்சி 2) 1789 பிரெஞ்சுப்புரட்சி
3) 1788 அமெரிக்க சுதந்திரப் போர் 4) 1917 இரசியப் புரட்சி

39) இரண்டாம் உலகப் போருடன் சம்பந்தப்பட்ட சில நாடுகள் முதலாவது நிரலிலும் அதனோடு தொடர்புடைய சில தலைவர்கள் இரண்டாவது நிரலிலும் உள்ளன இதை ஒழுங்கு படுத்தும் போது அமையும் சரியான விடை

| நிரல் 1 | நிரல் 2 |
|---|---|
| A இரசியா | F ஸ்ராலின் |
| B ஐக்கிய இராச்சியம் | G முசோலினி |
| C இத்தாலி | H சாள்டிகோல் |
| D ஜேர்மனி | I வின்ஸ்ரன் சேர்ச்சில் |
| E பிரான்ஸ் | J ஹிட்லர் |
| | K ரூஸ்வல்ட் |

1) KIGJH 2) FIGJH
3) HIGJK 4) GIFKJ

40) இவ்வாண்டு மே/ஜூன் மாதத்தின் போது ஜனநாயகத்துக்கு விரோதமான முறையில்அரசாங்கத் தலைமைத்துவத்தில் மாற்றத்தை ஏற்படுத்திய நாடு
1) பாகிஸ்தான் 2) பிஜித்தீவுகள்
3) தாய்லாந்து 4) மாலைதீவுகள்

காக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சிலதினங்களின்முன் மேற்படி பாடசாலையில் 600 ஓடுகள் திருட்டுப்போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் அருகேயுள்ள குடிசை வளவொன்றில் ஓடுகள் பல இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில், பாடசாலை பழைய மாணவர்கள் மேற்கொண்ட முயற்சியின் பயனாக கையும் மெய்யுமாக இவர்கள் பிடிபட்டதாக தெரியவந்துள்ளது.

சில ஓடுகள் விற்கப்பட்ட நிலையில் மீதி 500 இற்கும் மேற்பட்ட ஓடுகள் ஏற்றப்

யின்சிற்றூழியர், அவருடைய மகன் மற்றும் மாநகரசபை சிற்றூழியர், லாண்ட்மாஸ்ரர் சாரதி ஆகியோர் சந்தேகத்தின் பேரில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

(உ-110)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி' பளைபகுதி அதிபர், சாரணர் தலைவர்கள்' ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கான சாரணர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(செ)


## உடன் தேவை

★ அனுபவமுள்ள அச்சுக்கோப்பாளர்கள் (இருபாலாரும்).

★ அச்சுக்கோப்புப் பயிலுநர்கள் (ஆண்கள் மட்டும்).

உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

'வலம்புரி'

இல. 15, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

## இன்று ஒரு தகவல்

# கனவுகளூடாக இலட்சியத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்

பொய்யானவைகளை உண்மை என்று மயங்கும் சகஜ நிலையிலிருந்து விழிப்புணர்ந்து உண்மையைபுரிந்து கொள்ளும் உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்.

பிரமாண்டங்களில் மனதை இழக்காமல் யதார்த்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளை சரியாக எடைபோட்டு செயல்படும் திறனை வளர்த்து கொள்ளல் வேண்டும்.

கனவுகளைவளர்த்துகொள்ளுங்கள் வளர்ச்சிக்கு உதவிகரமானது ஆனால் கற்பனைகளிலேயே வாழ்க்கையின் பெரும்பான்மையைக் கழித்துவிடும் தவறுகளிற்கு அடிமைகள் ஆகிவிடாதீர்கள்.

உண்மையை உணர்ந்து செயற்படுபவர்கள்தான் விரும்பியதை விரும்பிய பொழுது விரும்பிய வண்ணம் விரும்பியவாறு அடைகிறார்கள்.

நீங்களாகவே எந்தவொரு மாயைக்குள்ளும் உங்களை அடைத்துக் கொள்ளாதிருங்கள், உங்களுக்குள் உங்களை நீங்களே கேள்வி கேட்டுக் கொண்டு விடைகாண முயலுங்கள்.

உங்களைக்கேலி செய்பவர்கள் பழிப்பவர்கள் மீது கோபம் கொள்வதைத் தவிர்த்து கேலிக்கான காரணத்தை சரியாக கண்டு உணர்ந்துதிருத்திக்கொள்ளுங்கள்.

மாற்றங்களில் நம்பிக்கை கொண்டு செயற்படுங்கள் அதே நேரத்தில் மாற்றத்திற்கு தேவையான கால அவகாசத்தில் அவசரப்படாமல் பொறுமையைக் கடைப்பிடியுங்கள்.

எத்தனை பெரிய காரியமாயினும் தொடக்கம் எளிமையாய்த்தான் இருக்கும். இன்றைக்கு மிகப்பெரிய பிரமாண்டமாக விளங்கும் அடையாறு ஆலமரம்கூட மிகச்சிறியதான ஓரிலையுடனான தளிரிலிருந்துதான் வளர்ந்தது என்பதிலே உங்களிற்கு எந்த சந்தேகமும் வேண்டாம்.

தெளிவாக புரிந்துகொள்வதன் அடிப்படையில் தொடங்கும் நட்புத்தான் நீடித்து நன்மை பயக்கும் இல்லையேல் சங்கடமும் மனவருத்தமும்தான் மிஞ்சும்.

சுய நினைவை மனதிற்கொண்டு உண்மைக்குமாறான காரியத்தைச் செய்வதையோ அல்லது கருத்தைச் சொல்வதையோ முற்றிலுமாக தவிருங்கள்.

உங்கள் திறனை வளர்ப்பதென்பது பாறையில் வேர் பிடிப்பதுபோல கடினமானதாயிருந்தாலும்வேர் பிடித்தபின் பாறையைப் பிளப்பது போல் தடை தகர்த்து உயரலாம்.

இராமகிருஸ்ணா

## உலகின் முதல் பெண் பிரதமர்

# ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் இறுதி நிகழ்வு ஹொரகொல்லவில்

(கொழும்பு)

உலகின் முதலாவது பெண் பிரதமரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவியுமான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் இறுதிக் கிரியைகள் இன்றுமாலை ஹொரகொல்லாவில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் ஜனாதிபதி சந்திரிகா உட்பட இலங்கையின் முக்கிய பிரமுகர்களும், வெளிநாட்டு பிரதிநிதிகள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ் இறுதி ஊர்வலத்திற்கான முன்னேற்பாடாக கொழும்பு, கண்டி பிரதான போக்குவரத்துப் பாதையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் பிரகாரம் கொழும்பிலிருந்து கண்டி நோக்கி வரும் வாகனங்கள் மேரிஸ்வத்தை ஊடாகவும், கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி வரும் வாகனங்கள் நித்தம்புவவிலிருந்து கொழும்புக்கும் அனுப்பிவைக்கப்படும்.

இவ் வீதி மாற்றம் இன்று நண்பகல் 12 மணியிலிருந்து அமுலாக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மறைந்த பிரதமருக்குஅஞ்சலி செலுத்துமுகமாக இலட்சக்கணக்கானோர் ஹொர கொல்லவிற்கு சென்ற வண்ணம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்களின் பாதுகாப்பை முன்னிட்டு பொலிஸார் தமது நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (த-க)

# தென்மராட்சி மக்களின் இடப்பெயர்வு தொழில்கள் பெருமளவில் முடக்கம்

(தென்மராட்சி)

தென்மராட்சி இடப்பெயர்வு பல்வேறுவிதமான சுயதொழில் உற்பத்தித்திட்டங்களில் ஈடுபட்டிருந்த பல நூற்றுக்கணக்கானவர்களை எவ்விதமான வருமானமும் அற்ற நிலைக்குத்தள்ளியுள்ளது.

இதன் பொருட்டு சுய தொழில் வருமானமீட்டும் திட்டங்களிலேயே முற்று முழுதாகத் தங்கியிருந்த பல குடும்பங்கள் தொடர்ந்தும் வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்ட நிலையில் அரசின் நிவாரணத்தையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக தென்மராட்சியில் ஆடுவளர்ப்பு, மாடு வளர்ப்பு, கோழிவளர்ப்பு, தும்புக்கைத்தொழில், சிறு வியாபாரம்பனைசார் உற்பத்தித்திட்டம் போன்றவற்றில் ஈடுபட்டவர்கள் தமது தற்போதைய குடியமர்வு இடங்களில் சுதந்திரமாக ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை விட, அரசாங்க வங்கிகளில் சுயதொழில் முயற்சித்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கெனப் பெறப்பட்ட கடன் நிதியில் ஆரம்பிக்கப்பட்ட பல தொழில் முயற்சிகளும் கைவிடப்பட்ட நிலையில்தான் இன்னமும் இருப்பதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, சுயமுயற்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கென வங்கிகளில் கடன் தொகைகளைப் பெற்றிருந்த போதிலும், அதனை உரிய முறையில் பயன்படுத்தக் கூடிய நிலைப்பாடு இருக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது. (க-77)

# தேர்தல் வன்முறைகள் தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்

## பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் காலத்தின் போது இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படுமென பொலிஸ் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் இது சம்பந்தப்பட்ட பல முறைப்பாடுகள் நாட்டின் பல பொலிஸ் நிலையங்களிலும் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (க-த)

# வருமானம் இழந்த கடற்றொழிலாளருக்கு இன்று முதல் நிவாரணம்

(புலோலி)

இடம்பெயர்ந்து வருமானம் இழந்த கடற்றொழிலாளர்களிற்கு நிவாரணம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கிணங்க நாகர்கோயில் கிழக்கு, மேற்கு, மாமுனை, செம்பியன்பற்று வடக்கு, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, காளியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய கடற்... மேற்படி நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இந் நிவாரணம் இன்று தொடக்கம், தொடர்ந்து 3நாட்கள் வழங்கப்படவுள்ளது.

பிரதான குடியிருப்பாளரின் அடையாள அட்டையை சமர்ப்பித்து மேற்படி நிவாரணத்திற்கானபதிவுகளைமேற்கொள்ளுமாறு வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் வி. எஸ். வேலாயுதம் ...

# வதிவிடங்கள் இன்மையால் இடம் பெயர்ந்தோர் பெரும் அவலம்

(தென்மராட்சி)

தென்மராட்சி கிழக்கு பிரதேசத்தில் இருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து வடமராட்சி, வலிகாமம் பிரதேசங்களுக்கு வந்துள்ளமையைத் தொடர்ந்து இப்பிரதேசங்களில் தங்குவதற்கான இருப்பிடங்களைப் பெறுவதில் அத்தகைய குடும்பங்கள் பல்வேறு விதமான கஸ்டங்களை எதிர் நோக்கியுள்ளன.

இப்பிரதேசங்களில் ஏலவே தங்கியுள்ள தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்துக் குடும்பங்கள் காலியாக இருந்த வீடுகளைப் பெற்றுவிட்டதால் வெற்றிடமான வீடுகளைத் தேடிக் கண்டுபிடிப்பது குதிரைக் கொம்பாக இருப்பதாகத் தெரியவருகின்றது.

இதன் காரணமாக பல குடும்பங்கள் இன்னமும் பொது இடங்களிலேயே பல சிரமங்களுக்கு மத்தியில் தங்கியுள்ளன. இவர்களது சுகாதார குடிநீர் மற்றும் பொதுப் பாவனைக்கான நீர் போன்றவை பிரச்சினைக்குரியதாகவே இருந்து வருகின்றன. (செ-77)

# இலண்டன் பயணம்

(தென்மராட்சி)

சிறுவர் பாதுகாப்பு நிதிய யாழ்.மாவட்ட இணைப்பாளர்திருமதி லிபிசனாட்இலண்டன் பயணமாகவுள்ளார்.

1985 ஆம் ஆண்டு முதல் ...

# யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்கள் தமிழ் மொழியில் வாக்கு மூலங்கள்

## யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழியில் வாக்கு மூலங்கள் பதியப்படுவதில்லையாம்

### பொது மக்கள் அதிருப்தி

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கிவருகின்ற பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழியில் வாக்கு மூலங்கள் மற்றும் முறைப்பாடுகள் பதியப்படாமையால் பொலிஸ் நிலையங்களுக்குச் செல்கின்ற சாதாரண பொது மக்கள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.

நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் தமது முறைப்பாடுகளை தமது தாய்மொழியிலேயே அளிக்க வசதிகள் இருப்பதாகக் கூறப்படுகின்ற போதிலும் அது யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் பொதுமக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு அனுப்பிவைத்துள்ள அவசரகடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அம் மகஜரில் மேலும் குறிபிட்டுள்ளதாவது;

யாழ்.மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யச் செல்கின்ற பொதுமக்கள் தமக்குத் தெரிந்த மொழியிலேயே முறைப்பாடு செய்ய அனுமதிக்கப்படல்வேண்டும். வேற்று மொழியில் முறைப்பாடுகளை எழுதிவிட்டு, ''இதை நான் வாசித்து விளங்கிக்கொண்டேன்'' என எப்படி முறைப்பாட்டாளர் கையொப்பமிடமுடியும். எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இங்கு நிலவுகின்ற இந்தக் குறைபாட்டை உடனடியாகத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய முன்னேற்றகரமான செயற்பாடுகள் மூலம் நாட்டில் சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் ஏற்படுத்த உதவும் எனவும் அம் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

(க-77)

ளர் திருமதி லிபிசனாட்இலண்டன் பயணமாகவுள்ளார்.

1985 ஆம் ஆண்டு முதல் இவர் இந் நிலையம் ஊடாக சிறுவர்களுக்கான பல்வேறுபட்ட செயல் திட்டங்களில் முன்னின்று உழைத்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-77)

### உள்ளூராட்சி ஊழியர்கள் கவலை

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில்பணிபுரியும் சுமார் 96 உள்ளூராட்சி ஊழியர்களின் தனியார் கோவைகள் சாவகச்சேரியில் இருந்து எடுத்து வராமை குறித்து அவ்ஊழியர்கள் மத்தியில் மிகுந்த கவலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் நகராட்சி மன்றத்தின் முக்கிய ஆவணங்களும் அங்கே கைவிடப்பட்ட நிலையில் இருப்பதாகவும் அறியப்படுகின்றது. தற்போது சாவகச்சேரி பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதால் தமது தனியார் கோவைகளை அங்கு சென்று எடுத்து வருவதற்கான முயற்சிகளை நகராட்சி மன்றம் மேற்கொள்ளும் என எதிர்பார்ப்பதாக ஊழியர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ரையன்,உடுத்துறை, காளியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய கடற்றொழில் கிராமத்தவர்களில் 546 குடும்பத்தவர்களிற்கு

கொள்ளுமாறு வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் வி.எஸ்.வேலாயுதம் தெரிவித்துள்ளார். (த-52)

## மின்னிணைப்பு பெற்றவர்களுக்கு மின்மானி பொருத்தப்படுகின்றது

(அச்சுவேலி)

யாழ். குடாநாட்டுப் பகுதியில் கடந்த 95ம் ஆண்டின் பின்னர் இலங்கை மின்சார சபையினூடாக மீள மின்சாரம் பெற்றுள்ள இதுவரை மின்மானி பொருத்தப்படாத மின்னிணைப்பை பெற்றுள்ள மின் பாவனையாளர்களுக்கு அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க மின்மானி பொருத்தும் பணி, மின்சார சபையினரால் மேற் கொள்ளப்பட்டுவருகின்றது.

இதேவேளை இவ்வாறு மின்மானி பொருத்துவதற்கு விரும்பும் மின் பாவனையாளர்கள் மின்மானி பொருத்துதற்கு கோரும் கடிதத்துடன் மின்சாரசபைக்கு செலுத்திய சேவை இணைப்புக் கொடுப்பனவு பற்றுச்சீட்டினதும், மின்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் நிழற்பட பிரதிகளையும் இணைத்து அதற்கான விண்ணப்பத்தை தம்மிடம் ஒப்படைத்து கொள்ளமுடியும் என மின்சார சபையின் சுன்னாக அலுவலக வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர். (செ-14)

### தேங்காய் விலை உயர்வு

(தென்மராட்சி)

தென்மராட்சிகிழக்குப் பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்கள் மற்றும் மக்கள்இடம்பெயர்வுகளினால் வலிகாமம், வடமராட்சி பிரதேசங்களில் தேங்காயின் விற்பனை விலை திடீரென உயர்ந்துள்ளது.

இத் திடீர் விலை அதிகரிப்பினால் பொது மக்கள் பெரிதும் கஷ்டங்ளை அனுபவித்து வருகின்றனர் எனத் தெரிய வருகின்றது.

தற்போது தேங்காயின் விலை 15 ரூபாவாக சந்தைகளில் விற்பனைசெய்யப்பட்டு வருகின்றது.

(க-77)

# ஆந்திர மாநிலப்பாடப்புத்தகங்களில் நரசிம்மராவ் பற்றிய பகுதி நீக்கம்

## வழங்கப்பட்ட தீர்ப்பின் எதிரொலியாம்

(புதுடில்லி)

இந்திய முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் இற்கு, 3 ஆண்கள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கியதைஅடுத்து ஆந்திர மாநிலத்து பாடப்புத்தகங்களில் இவர்பற்றி சேர்க்கப்பட்டிருந்த பகுதி நீக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக, ஒலிம்பிக் வீராங்கனை மல்லேஸ்வரி பற்றியவிபரங்கள் பாடவிதானத்தில் இணைக்கப்படுவதற்கு அம்மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

1993 ஆம் வருடம் ஜுலை மாதம் நரசிம்மராவ் அரசுக்கு எதிராக நாடாளுமன்றில் கொண்டுவந்த நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு எதிராக வாக்களிக்க 4 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பல இலட்சரூபாவை லஞ்சமாக வழங்கியதாக முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் பூட்டாங் ஆகியோர் மீது சிறப்பு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ் வழக்குத்தொடர்பான விசாரணைகளின் முடிவில் நேற்றுமுன்தினம் நரசிம்மராவ், பூட்டாசிங் ஆகியோருக்கு தலா 3 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையும், ஒருலட்சரூபா அபராதமும் இந்திய சிறப்பு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டது தெரிந்ததே.

இதேவேளை,

அண்மையில் ''ரான்சி'' நிலபேர ஊழல் வழக்கில் தமிழக முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு சென்னை தனி நீதிமன்றம் 3 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கியமை மற்றும் நரசிம்மராவ் தொடர்பாக வழங்கிய தீர்ப்புகள்குறித்து பல தரப்பினரும் திருப்தி தெரிவித்திருப்பதுடன், அரசியலில் இருந்து கொண்டு ஊழல் புரிவோர்க்கு இத்தண்டனைகள் நல்லதோர் பாடமாக அமையும் எனவும் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ)

# யுத்தக் கப்பல் வெடித்து சிதறியது அமெரிக்க துறைமுகத்தில் சம்பவம்

(வாஷிங்டன்)

ஏடன்துறைமுகத்தில்தரித்து நின்ற அந்நாட்டு போர்க்கப்பல் திடீரென வெடித்துச் சிதறியதாக அந்நாட்டு உத்தியோக பூர்வ செய்தி ஸ்தாபனம் நேற்று தெரிவித்தது.

போர்க்கப்பலிற்குள் இருந்த குண்டொன்று வெடித்ததனாலேயே மேற்படி சம்பவம் நிகழ்ந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின் போது கப்பலில் இருந்த 4 அமெரிக்க கடற்படையினர் மட்டுமே பலியாகினர் இதே வேளை,

அதிகளவு வெடிப்பொருட்களை ஏற்றிவந்த சிறுகலம் ஒன்று மேற்படி கப்பலுடன் மோதியதாலேயே இவ் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என அமெரிக்க கடற்படையினர் ஊகம் வெளியிட்டுள்ளனர்.

அவ்வாறெனில், இது திட்டமிடப்பட்ட செயலா இல்லையேல் தற்செயலாக நிகழ்ந்ததா எனும் விபரங்களை அறியும் வகையில் அமெரிக்க கடற்படையினர் புலனாய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

# பலஸ்தீனம் மீது இஸ்ரேல் தாக்கு முக்கிய பல கட்டடங்கள் சேதம்

(ஜெருசலேம்)

பலஸ்தீனத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்கள் மீது பலத்த ஹெலிக்கொப்டர் தாக்குதல்களும் ரொக்கட் லோஞ்சர் தாக்குதலும் நடத்தியுள்ளதாக இஸ்ரேல் பிரதமரின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேலும் தொலைக்காட்சியொன்றிற்கு பேட்டியளிக்கையில்; பலஸ்தீனம் வன்முறைகளைக் கைவிடும் வரை இப்படியான திடீர்தாக்குதல்களை நடத்துவோமென்றும் அந்தஅதிகாரி குறிப்பிட்டார்.

முசாமிலிருந்த இஸ்ரேலிய

### உலக தரிசனம்

படையினர் இருவரை பலஸ்தீனகிளர்ச்சியாளர்கள்கொடூரமான முறையில் கொலை செய்ததைஅடுத்தேஇஸ்ரேல் இந்த தாக்குதலை நடத்தியதாக அவர் தெரிவித்தார்.

இந்தத்தாக்குதலில் ரொக்கட் தாக்குதல்கள் ஹெலிக்கொப்டரிலிருந்து குண்டுத் தாக்குதல்கள் மற்றும் ரொக்கட்லோஞ்சர் தாக்குத ல்கள் நடத்தியதாக அந்தஅதிகாரி தெரிவித்தார். இதில் 15பேருக்கு படுகாயங்கள் ஏற்பட்டதாகவும் மேலும் அறியப்படுகிறது.

பலஸ்தீனம் சீரானகொள்கைகளை கடைப்பிடியாது விட்டால் இஸ்ரேல் இது போன்ற தற்காப்பு நடவடிக்கையில் ஈடுபட்டே தீரும் என்றும் அவ்அதிகாரி உறுதிபடத் தெரிவித்துள்ளார். (க-து)

# மருத்துவத்திற்கான நோபல் பரிசு அமெரிக்க மருத்துவருக்கு கிடைத்தது

(நியுயோர்க்)

மிலேனியம் ஆண்டின் மருத்துவத்திற்கான நோபல் பரிசினை அமெரிக்க மருத்துவ விஞ்ஞானி ''போல் கிளிங் காட்'' பெற்றுள்ளார்.

மேற்படி விஞ்ஞானியின் மருத்துவத்தின் ஆழ்ந்த புலமைக்கு இப்பரிசு வழங்கப்பட்டதாக சுவீடன் நோபல் பரிசுக்குழு அறிவித்துள்ளது.

இதே போன்று மருத்துவத்திற்கான நோபல் பரிசினை பலநாட்டவரும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. [த]

**பங்களாதேஷ்**

# முன்னாள் அமைச்சர்கள் நால்வருக்கும் குற்றவாளிகள் எனத்தீர்ப்பு

## முஜிபூர் உதவியாளரை கொலை செய்தனராம்

(டாக்கா)

பங்களா தேஷ் சிற்பியான ஷேர் முஜிபூர் ரஹ்மானின் 4 உதவியாளர்களைக் கொலை செய்த வழக்கில் முன்னாள் அமைச்சர்கள் 4 பேருக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் குற்றவாளிகளெனத் தீர்ப்பு வழங்கப்பட இருக்கிறது.

1971 ஆம் ஆண்டு புரட்சியின்போது முஜிபூர்ரஹ்மானின் ஆதரவாளர்களெனக் கருதப்பட்டஇவர்கள்இராணுவத்தினரால் கத்திகளால் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டனர்.

இந்த-வழக்கு நீண்டகாலம் விசாரணையின்றி இருந்து இப்பொழுதுதான் உச்ச நீதிமன்றத்தில் பலநாட்களாக விசாரிக்கப்பட்டன.

மந்திரிகள் இராணுவ அதிகாரிகள் உட்பட 22 பேர் இந்த வழக்கில் விசாரிக்கப்பட்டனரென்றும் இன்னும் பல இராணுவ அதிகாரிகளுக்கும் தண்டனை வழங்கப்படலாமென்றும் இரண்டொரு தினங்களில் எல்லோருக்கும் தண்டனை வழங்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-து)

# இந்திய பிரதமர் வாஜ்பாய்க்கு விரைவில் மற்றுமொரு சத்திரசிகிச்சை

## ஆதாரமற்றது என்கிறார் அமைச்சர்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு வலது முழங்காலிலும்அறுவைச்சிகிச்சைமேற்கொள்ளப்படவிருப்பதாக வெளியான செய்திகளை, ஆதாரமற்றவையென நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பிரமோத்மகஜன் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி மும்பையிலுள்ள பிரிட்டிஷ் ஹண்டி மருத்துவமனையில் பிரதமர் வாஜ்பாய்க்கு மூட்டு மாற்றுசத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடந்தேறியது.

அவர் குணமடைந்து வரும் இவ்வேளையில் வலது முழங்காலிலும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவிருப்தாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்களிலிருந்து செய்தி வெளியாகியமை ஏற்கனவே தெரிந்ததே. (க-உ)

# தென்கொரிய ஜனாதிபதிக்கு சமாதான நோபல் பரிசு கிட்டும்

(சியேல்)

இவ்வாண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு தென்கொரிய ஜனாதிபதிக்குக் கிடைக்க இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. சபை பொதுச்செயலர் கோபி அனன் உட்பட 150 பேர் சமாதானத்துக்கான நோபல் பரிசிற்கு பரிசீலிக்கப்படுகின்றார்கள் என்றும் இவர்களில் தென்னாபிரிக்க ஜனாதிபதிக்கு நல்ல சந்தர்ப்பங்கள் உருவாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

5 பேர் கொண்டகுழுவினர் ஆராய்வதாகவும் நாளை அனேகமாக சமாதானத்துக்கான நோபல் பரிசு பெறுபவரின் பெயர் வெளியிடப்பட இருக்கின்றன. (து)

## சிரிய, எகிப்து விமானங்கள்

அந்தஅதிகாரி குறிப்பிட்டார்.

முகாமிலிருந்த இஸ்ரேலிய

இந்த தாக்குதலை நடத்தியதாக அவர் தெரிவித்தார்.

தெரிவித்துள்ளார்.

(க-து)

# செச்சினியாவில்குண்டுத்தாக்குதல் 15 பொலிஸார் பலி; பலர் காயம்

(குறொஷ்னி)

செச்சினியாவின் தலைநகரான குறொஷ்னியில் வெடிமருந்துகள்நிரப்பியகார்ஒன்றுவெடித்ததில் 15 பேர் பலியானெர் 10 பேர் படுகாயமடைந்தனர்.

சன நெரிசல்மிக்க நகரின் ஒரு புறத்தில் காவல் துறையினரின் வாகனம் அவ்வழிசெல் வந்து கொண்டிருந்தபொழுது நின்றிருந்த காரில் வைக்கப்பட்டிருந்த குண்டு றிமோட் கொன்றோலால் இயக்கி வெடிக்கப்பட்டதென்றும் வாகனத்தில் வந்து கொண்டிருந்த 15 காவல்துறையினர் பலியாகினரெனறும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த10பேர்அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனரென்றும் இந்த குண்டு வெடிப்புகளுக்குரிய காரணங்கள் எதுவென ஆராயப்படுவதாவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## குழப்பநிலை நீடிப்பு

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் மேலும் குழப்பநிலை தொடர்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் உள்ளகாஸா பகுதி, டெஸ்ராங் வட்டகையிலுள்ள பலஸ்தீனர்களின் நிலைகள் மீது இஸ்ரேல் உலங்கு வானூர்திகள் ரொக்கட் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக தெரியவந்துள்ளது

டெஸ்ராங் நகரான கபாலாவில் பலஸ்தீனப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டமையின் பின்னணியில் மீண்டும்இப்பகுதிகளில் கலவரங்கள் தலை தூக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# சிம்பாவே கோர ரயில் விபத்தில் 14 பேர் ஸ்தலத்தில் பலியாகினர்

(ஹராரே)

சிம்பாப்வே விக்ரோறிய நீர் வீழ்ச்சிக்கு அருகில் இரு வேறு ரயில்கள் மோதியதில் 14பேர் இறந்தனர் 20 பேர் காயமடைந்தனர்.

விக்ரோறியா நீர்வீழ்ச்சிக்கருகே நேருக்கு நேர்ரயில்கள் மோதியதில் இந்த துயர சம்பவம் இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்துக்குரிய காரணங்களை அறிவதில் காவல்துறையினர் ஈடுபட்டுள்ளனர். இதேவேளைஇன்னும் பலர் இறந்திருக்கலாமென்றும் மீட்புப் பணிகள் தொடர்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது, (து)

## சிரிய, எகிப்து விமானங்கள் ஈராக்கில் தரை இறங்கியதற்கு அமெரிக்கா கடும்கண்டனம்

(பக்தாத்)

ஐ. நா. சபையின் அனுமதியில்லாமல் சிரிய மற்றும் எகிப்து விமானங்கள் ஈராக்கில் தரையிறங்கியதை அமெரிக்கா வன்மையாக கண்டிப்பதாக அந்நாட்டு செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

அந்த ஸ்தாபனம் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபை ஈரான் ஈராக் யுத்தத்தை அடுத்து ஈராக் மீது பொருளாதாரத் தடையைப்போட்டிருந்தது.

இதேவேளை கடந்தவாரம் எகிப்தியவிமானம் எந்தவித ஐ. நா. அனுமதியுமின்றி மருந்து வகைகளுடன்சென்று இறங்கியது. நேற்றுமுன்தினம் சிரியவிமானம் ஆசிரியர்சங்க உறுப்பினர்களுடன் ஈராக் சென்று இறங்கியது. இதேவேளை எகிப்திய விமான மொன்று மாணவர்களுக்கான புத்தகங்களுடனும் மற்றும் உபகரணங்களுடனும் 185 பிரதிநிதிகளுடனும் அங்கு சென்று இறங்கியுள்ளது.

இந்த விமானங்கள் ஈராக்கில் தரையிறங்குவது குறித்து ஐ. நா. பாரா முகமாக இருப்பதாகவும் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் றிச்சேட் பவுச்சர் தெரிவித்தார்.

(து)

உலக தரிசனம் 3 இற்கான வினாக்கள் நாளைய ‘வலம் புரியில்’ வெளியாகும்.

## பிரமுகர்கள் காத்திருப்பு

(புதுடில்லி)

கன்னட நடிகர் ராஜ்குமார் மற்றும் மூவரை விடுவிப்பது தொடர்பாக சந்தனமரக்கடத்தல் வீரப்பனுடன் பேச்

(3ஆம் பக்கம் பார்க்க)

எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும் தம்மொரு கொள்ளாத கொள்ளாது உலகு

- குறள்

# வலம்புரி

## சமாதானத்திற்கு யுத்தமென்றால்-.

பதினோராவதுபாராளுமன்றப் பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகிவிட்டது. அறுதிப் பெரும்பான்மை ஆசனங்களை எக்கட்சிகளும் பெற்றுக் கொள்ளாத போதிலும், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் ஆதரவுடன் பொது ஜனஐக்கிய முன்னணி ஆட்சியமைப்பது உறுதியாகிவிட்டது. இதற்கு ஆதாரமாக பிரதமர் இரட்ணசிறி விக்கிரமநாயக்கா ஆட்சியமைப்பதற்குரிய ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்-

ஜனநாயகத்தின் பேரால் இடம்பெறும் இலங்கையின் ஆட்சி மாற்றங்களால் தமிழ் மக்களுக்கு எதுவித பயனும் இல்லை என்பது ஏற்கனவே தெரிந்த முடிவு. பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியிலிருந்தாலென்ன. ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியமைத்தாலென்ன ஒன்று கொழுக்கட்டை மற்றையது மோதகம் என்ற நிலைதான் தமிழ் மக்களுக்கு ஆனால் தென்னிலங்கை நிலைமை அப்படியல்லஅங்கு சிங்கள மக்களுக்கு இருக்கும் சுதந்திரமும்,உரிமையும் ஆட்சி அமைப்புப் பற்றி அவர்கள் எந்த முடிவும் எடுக்க முடியும், அது அவர்களுக்கு பௌத்த தர்மத்தின் பேரால் கொடுக்கப்பட்டகொடை. அதன் அடிப்படையில் கடந்த தேர்தலின் மூலம் பெரும்பாலான சிங்கள மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்பியும்-விரும்பவுமுள்ளனர் என்பது வாக்களிப்பிலிருந்து அனுமானிக்க முடிகிறது.

இவ்வாறு ஆட்சி மாற்றத்தின் விருப்பத்தெல்

# எளிமையாக,சிறப்பாக கொண்டாடப்பட்ட

# திருமறை கலாமன்ற சிறுவர் மகிழ்வரங்கு

ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி அனைத்துலக சிறுவர் தினம் என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமே. எனினும் சமகால நெருக்கடியான சூழ்நிலை மேற்படி தினத்தினை கொண்டாடுவதற்குப் பொருத்தமானதா? என்கின்ற கேள்விக் குறியுடனே இருந்துவிட்ட பல்வேறு அரச/அரச சார்பற்ற உள்ளூர்-வெளியூர் நிறுவனங்கட்கு மத்தியிலே சிறுவர்களினது நிலைப்பாட்டினை உணர்ந்து செயற்பட்ட பெருமை ஒரு சில நிறுவனங்களினைச் சார்ந்திருந்தாலும். மிகவும் எளிமையாக ஆனால் சிறப்பாக மேற்படி தினத்தை ஒக்டோபர் முதலாம் திகதியே யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்தி முடித்த பெருமை யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தினரையே சாரும்.

காலை 9.30 மணிக்கு சரியான நேரத்திற்கே மிகவும் சுருக்கமான அறிமுகஆசியுரைகளுடன் ஆரம்பமான சிறுவர் மகிழ்வரங்கு நிகழ்வில் ஏறத்தாழ 150க்கும் அதிகமான சிறுவர் சிறுமியர் பங்குபற்றியிருந்ததுடன் மாலை வரை கலகலப்பாக குதூகலித்து அன்றைய தினத்திலேனும் நாட்டின் அசாதாரண சூழ்நிலையை மறந்திருந்தனர் என்றே கூற வேண்டும். அந்தளவுக்கு, பங்குபற்றியிருந்த அனைவரும் வீடு திரும்புகையில் அவர்களது முக மலர்ச்சியிலிருந்து, உணர்ந்து கொள்ளமுடிந்தது.

### பாதிப்பு

நாட்டில் அதுவும் குறிப்பாக யாழ். மாவட்டத்திலே சிறுவர்களினை பொறுத்த வரையில் அவர்களினால் போர், வன்முறை, துன்பம், சோகம், சண்டை, பிணக்கு என அனைத்தையுமே வழமைக்கு மாறான செயற்பாடுகளாகவே நோக்க முடிகின்றது. அத்தோடு குடும்ப வட்டத்தை எடுத்துக் கொண்டால் இடம்பெயர்வு, தந்தை -தாய் அல்லது இருவரையும் அல்லது உறவுகளினை இழத்தல், அகதி நிலை, துஷ்பிரயோகம் என ஏதோ ஒரு சம்பவத்துடன் தொடர்புபட்டதுமல்லாமல் அதன் விளைவாக ஊனமுறல், அவையவங்களினை இழத்தல் என தொடர்ச்சியான பாதிப்புக்களினை தருவதாகவும் சத்தங்கள், ஓய்வே இல்லாத கற்றல் முறைமை மிதிவெடிப் பயம், ஊரடங்கு போன்ற இன்னோரன்ன பல காரணிகளினாலும் நாளாந்தம் அநேகமாக அனைத்து யாழ். மாவட்டச் சிறுவர்களும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்நிலையிலிருந்து; மேற்படி காரணிகளுக்கு ஐக்கியப்பட்டே ஆக வேண்டும் என்கின்ற கட்டாய நிலையிலிருந்து சிறுவர் சிறுமிகளது இறுக்கமாகிவிட்ட மனநிலை சற்றேனும் தளர்வுறுவதற்கு; அல்லது விடுபடுவதற்கு அல்லது மாற்றம் ஒன்றினை எதிர்நோக்குவதினூடாக சிறுவர்கட்கு மேற்படி நிகழ்வுகள் களமாகி விடுகின்றன. அந்த வகையில் திருமறைக் கலாமன்றத்தினர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வானது பங்குபற்றிய சிறுவர்கட்குமட்டுமல்லாமல் அச்சிறுவர்கள்சார்ந்த சமூகத்திற்கும் நிறைவான திருப்தியை உண்டு பண்ணும் வகையில் திட்டமிட்டுச் செயற்பட்ட விதம் பாராட்டுக்குரியதே.

### குதூகலம்

யுனிசெவ் நிறுவன வதிவிடப் பிரதிநிதி, மன்றசெயலர், மதகுரு அவர்களின்சுருக்கமான உரைகளுடன் நிகழ்வானதுகளைகட்டத்தொடங்கியது. ஆடல், பாடல், ஓவியம், நாடகம், கதைகூறல், தாளலயம், தியானம், மன ஒடுக்கம், கிரகித்தல், சிந்தனைத் தூண்டல், அவதானம் போன்றவற்றினை அதிகரிக்கும் நோக்கில் அமைந்த சிறு சிறு விளையாட்டுக்கள் என யாவுமே சிறுவர்களினைப் பொறுத்தவரை மிகவும் இனிப்பூட்டும் சமாச்சாரங்களே. முடிவாக சிறுவர்களின் மனநிலை சொல்லியா தெரிய வேண்டும்? அனைவருமே ஆடினர், பாடினர், குதூகலித்தனர், சப்பணம் கொட்டித் தியானித்தனர், தாளவாத்தியங்களினைத் தம் இஷ்டப்படி முழக்கினர், ஓடித் திரிந்தனர், வழங்கப்படும் கட்டளைச் சமிக்ஞைகளினை ஏற்று நடக்கவும் தவறவில்லை.

ஆனாலும் ஒழுங்கமைப்பாளர்களினையேசிலஇடங்களில் ஓரங்கட்டி களைக்கச் செய்தாலும் சற்று நேரத்தில் அனைவருடனும் ஒன்றுபட்டே செயற்பட்டனர். இடைவெளியில் அதே தாளக் கட்டைசெய்வித்த தன் மூலம் நெருக்கடியிலிருந்து விடுபடும் உத்தி முறையினை சிறுவர்கள் அறிந்திருந்தனர். அருகே மற்றைய குழுவினர் ‘வன்’, ‘ரு’ ‘த்ரி’ க்கு தொடை, கைகள், விரல் போன்றவற்றில் தட்டி தாளம் எழுப்ப இதையே மற்றைய குழு சற்று தாமதமாக ஆரம்பிக்க ஒரு குழுவிற்கு ஒரு குழு இடையூறாக அமையும். ஆனாலும் அவற்றையும் மீறி போட்டியாக நன்றாகவே போராடி இறுதியாக ஒரு குழு வெற்றியீட்டியது. ‘‘ஷெல்லடிக்கு நடுவில் படிக்கிற மாதிரி என பங்குபற்றிய சிறுமி கூறியது போல இந்நிகழ்வின் மட்டுமன்றி அன்றைய தின நிகழ்வின் நோக்கமானதுஎட்டப்பட்டே இருந்தது.

களைப்புற்ற வேளைகளில் தண்ணீர், தேனீர், குளிர் பானம், சிற்றூண்டி, உணவு வகை என வழங்கப்பட்டும் சிறுவர்களினைப் பொறுத்தவரை அவற்றையெல்லாம் விட வழமையான அம்சங்கள் போய்க்கொண்டிருக்க இவை யாவும் எதற்கு?; ஆனாலும் சரியான காலத்திற்கு பரிமாறப்பட்டன. இதனிடையே சிறுவன் ஒருவனை ‘களைச்சுட்டீங்களா’? என வினவியபோது ‘இல்லையே என’! சர்வசாதாரணமாக பதில் வந்தது; ஆனால் அச்சிறுவனதுசட்டை

**ஜெ. தரன்**

வியர்வையால் தெப்பமாக நனைந்திருந்தது. அவரின்ருகே காணப்பட்ட மற்றோர் சிறுவனோ களைச்சுட்டோம் தான், ஆனா களைச்சதே தெரியவில்லை என தத்துவ ரீதியாக பேச மற்றோர் சிறுமி அருகே வந்த நாடகவியலாளர் ஒருவரைக்காட்டி களைக்கப்பண்ணிட்டினம் எனக்கடிந்துகொள்ள பெரியவர்கள் சிறியவர்கள் என்ற பேதமின்றி மன்றத்தினர் அனைவரும் அன்னியோன்யமாக பழகியிருந்தவிதம் மெச்சத்தக்கதே. தொடர்ச்சியாக இடம்பெயர்வு, அவலநிலை, தேர்தல்களேபரம் இவற்றினிடையே இதுவோ எமது தலைவிதிஎனஎண்ணி ஏங்கித் தவித்த பார்வையாளர்கட்கும், வாண்டுகளுக்கும் இந்நாள் நல்ல ...டும், குதூகலிக்கட்டும் என்பதற்கு அமைவாக அனைவரும் இன்புற்றிருந்தனர்.

மன்றத்தின் முக்கிய அங்கத்தவர்கள் மேற்படி தினத்தில் காலையில் 8-00 மணி வரை இலங்கை வானொலியில் ஓர் கலந்துரையாடலில் தொலைபேசிமூலம் இணைந்திருந்தபோதிலும்; இன்னும் சிலர் வெளியூர் சென்றுள்ள நிலையிலும் முன்னேற்பாடுகள் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தமையினையும் மண்டபம் சுவரொட்டிகள், சிறுவர் உரிமைகள் போன்ற விடயங்கள் பொறிக்கப்பட்டிருந்த பதாகைகள் இடப்பட்டு விழாக்கோலம் பூண்டிருந்தமையினையையும் மேற்படி தினத்தில் பங்குபற்ற வந்திருந்த யுனிசெவ் மற்றும் சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ.) அலுவலர்கள் மற்றும் அதிபர்கள் பாராட்டி தமக்குள்ளும் மற்றவர்களுடனும் கருத்துப் பரிமாறிக் கொண்டனர்.

விழாவின் இறுதியாக, சிறுவர், சிறுமிகளினது முகங்களில் எல்லாம் வினாக்குறி இனி எப்ப இப்படி? இன்றைய மாதிரி எப்பவுமே சந்தோஷமாகவே கனிந்து கழிந்துவிடாதா? இவற்றுக்கெல்லாம் விடைகாண எத்தனிக்கும்போது பிரதேச வாரியாகஅல்லதுபிரிவுகள்ரீதியாக சிறுவர்கள் பங்குபற்றுவதனை உறுதிசெய்வது நல்லது அல்லது அணைத்து இடங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டவர்கட்கு உரிய பயிற்சி முறைகளினை வழங்கி வள ஆளுநர்களாக ஆக்குவது என்பதை கவனத்தில் கொள்ளும் பட்சத்தில் நிகழ்வு பலருக்கும் பயன் தரத்தக்க வகையில் அமையும் என்பது எமது எண்ணம்.

இவ்வாறாக மிகவும் சிறப்புற அமைந்த சிறுவர் மகிழ்வரங்கு காலக்கிரமத்தில் சகல பிரிவுகட்கும் செல்லவேண்டும். அனைத்து சிறுவர்கட்கும் மனவிடுதலை என்பது எட்டக்கூடியதாக அமைய வேண்டும். அதுவே எதிர்பார்ப்பு.

எண்ணங்களும் எதிர்பார்ப்புக்களும் நிறைவுறும் நோக்குடன் திருமறைக் கலாமன்றத்தினர் செயற்படும் பட்

னர் என்பது வாக்களிப்பிலிருந்து அனுமானிக்க முடிகிறது.

இவ்வாறு ஆட்சி மாற்றத்தின் விருப்புக்கெல்லாம் ஆள்பவர்கள் அவ்வப்போது வழங்கிய உறுதிமொழிகளின் தோல்வியேகாரணமாகும்

''நான் ஆட்சிக்கு வந்தால்ஆறுமாதங்களுக்குள் பேச்சுவார்த்தை மூலம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவேன் என்று அரியாசனம் ஏறியவர் ஜனாதிபதி சந்திரிகா, ஆனால் இது வரை தான் கூறிய உறுதிமொழியை நிறைவேற்ற காத்திரமான நடவடிக்கை எதனையும் அவர் எடுக்கவில்லை.

அதற்கு மாறாக அகராதிக்கு அப்பாற்பட் சமாதானத்திற்கான யுத்தம் என்ற புதுமொழிப்பிரயோகம் ஒன்றை முன்வைத்தார்.

அதன் விளைவு ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டது. ஏதும் அறியாத இளைஞர்கள் கைதாகிக்காணாமல் போயினர். ''சமாதானத்திற்கான யுத்தம் தமிழ் மக்களுக்கு புதைகுழிகளைப்பரிசாக வழங்கியது.

இது சர்வ தேசமும் அறிந்த மறைக்க- மறுக்க முடியாத உண்மை.

ஆனால் மீண்டும் அதே ஆட்சியில் அதே பாட்டுக் கோஷ்டி-அதே பாடகர்கள், அதே சுருதி தொடர்ந்தும் ''சமாதானத்திற்கான யுத்தம்' என்றால் தமிழ் மண் எங்கும்யுத்தமயம்- மரண பயம் -புலம்பெயர்வு என சோகத்தின் சுமை கனக்கவே செய்யும் என்பதில் எந்த மாற்றமுமில்லை.

---

விளைவாக ஊனமுறல், அவையவங்களினை இழத்தல் என தொடர்ச்சியான பாதிப்புக்களினை தருவதாகவும் அமைந்து விடுகின்றன. இவற்றினால் மன ரீதியாக ஒரு வகைப் பாதிப்பு ஏற்பட்டு அதுவே வழக்கம் என்றாகிவிட்ட சிறுவர் சிறுமிகளுக்கு தொடர்ச்சியான ஷெல்லடி

ஓரங்கட்டி களைக்கச் செய்தாலும் சற்று நேரத்தில் அனைவருடனும் ஒன்றுபட்டே செயற்பட்டனர். அன்றைய தினம் பங்குபற்றிய சிறுவர்களினது பெற்றோர் அவதானித்திருந்தால் கூட தமது பிள்ளைகளா? என வியந்திருக்குமளவுக்கு செயற்பாடுடையவர்களாகக்காணப்பட்டனர்.

சிறுவர் மணல் மீது வீடு கட்டுவதும், சில சிறுவர்கள் சுவர்களில் கரித்துண்டுகளால் கிறுக்குவதும் அவர்கள் தம் பின்னணியிலே பல்வேறு உளவியற் கருத்துக்களினை கொண்டுள்ளமையினை உணர்ந்து மேற்படி தினத்திலும் அவர்களது மன உளைச்சல்களினை ஆற்றுகைகளாக வெளிப்படுத்திவிடுபடும் உத்தி முறைமையை பின்பற்றி சிறுவர்களினை சிறு சிறு குழுக்களாக பிரித்து ''கிளே'' வர்ணம் குழைத்து விளையாடி ஓவியம் உருவாக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விமானக் குண்டு வீச்சுக்குக் கீழே யுத்தம்வேண்டாம் சமாதானம் வேண்டும் எனவும் அழகிய வீடு, பூ போன்ற தமக்கேயுரியதான வெளிப்பாடுகளினை வெளிக்கொணர்ந்திருந்தனர். சமமான நேர இடைவெளிகளில் தாளக்கட்டு ஒன்றினைப் பழக்கி பின்பு இரு குழுக்களாகப் பிரித்து சிறு நேர

னிடையே இதுவோ எமது தலைவிதிஎன எண்ணி ஏங்கித் தவித்த பார்வையாளர்கட்கும், வாண்டுகளுக்கும் இந்நாள் நல்ல கொண்டாட்ட நாளாகவே அமைந்திருந்தது. ஆசியுரை வழங்கிய பாதிரியார் அவர்கள் குறிப்பிட்டிருந்ததுபோல பெரியவர்களாகிய நாம் இன்றைய சிறுவர்கட்கு வழங்கிய வன்முறை, ஆயுதக்கலாசாரம் இவற்றையே; பெரியவரான நாம்விட்டதவறை நாளையும் இச்சிறுவர்கள் விடக் கூடாது எனவே ஆடட்டும், பாடட்

எண்ணங்களும் எதிர்பார்ப்புக்களும் நிறைவுறும் நோக்குடன் திருமறைக் கலாமன்றத்தினர் செயற்படும் பட்சத்தில் புத்தாயிரம் ஆண்டில் சிறுவர்கட்கு சிறப்புற சிறுவர் மகிழ்வரங்கு நடாத்தியதன் மூலம் பலரது உள்ளங்களினையும் கொள்கை கொண்டது போன்று இன்னும் பற்பலரது உளங்களினை கொள்ளை கொண்டு அனைவர் மனங்களில் என்றும் நீங்காத இடத்தினை பெற்றதாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

---

## புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அவசர அழைப்பு விடுக்கப்பட்டது

(கொழும்பு)

பதினோராவது பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டபுதியஉறுப்பினர்களை தொலைபேசி மூலம் பாராளுமன்றத்தின்சபை நடவடிக்கைச்செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்,

புதிய பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடருக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்காகவே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் சபை நடவடிக்கைகளின் உதவிப் பணிப்பாளருடன் இன்றும், நாளையும் பிற்பகல் 4.மணிக்குமுன் 864303, 864273, 864367, 864304 ஆகிய தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ள வேண்டுமென்று பாராளுமன்றச் செயலாளர் நாயகம் கேட்டுள்ளார்.

மேற்படிதொலைபேசிஇலக்கங்களுடன் தெரிவு செய்யப்பட்டபுதியஉறுப்பினர்களோ, அல்லது அவர்களது செயலா

(8ஆம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

விளையாட்டுச் செய்தி

# தென்னாபிரிக்காவுடனான ஆட்டத்தில் இந்திய அணி 95 ஓட்டங்களால் வெற்றி

கென்யா தலைநகர் நைரோபியில் நடைபெற்று வரும் ஐ.சி.சி. கிரிக்கெட்தொடரின் நேற்றைய அரை இறுதி ஆட்டத்தில்இந்தியாதென்னாபிரிக்கா அணியை 95 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

முதலில் களமிறங்கிய இந்திய அணி விறுவிறுப்பாக ஆடியதில் 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கற்றுக்களை இழந்து 295 ஓட்டங்களைப் பெற்று இறுதி ஆட்டத்திற்குத் தெரிவானது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 42 ஓவர்களில் சகலவிக்கெற்றுக்களையும்இழந்து 200 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது,

நாளை நடைபெறவுள்ள இறுதி ஆட்டத்தில் இந்தியா நியூசிலாந்து அணிகள் மோதவுள்ளன.( ந-4)

# தமிழ் பேசும் மக்களுக்கு

## கௌரமான அரசியல் தீர்வு அவசியம்

### டக்ளஸ் கருத்து

(கொழும்பு)

இந்நாட்டில் பாரிய உயிர் அழிவுகளை ஏற்படுத்தும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு தமிழ் பேசும் மக்களுக்கு ஒருகௌரவமான அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்பதே எமது கோரிக்கையாகும்.

இவ்வாறு ஈ. பி. டி. பி அமைப்பின் யெலாளர்ாாநாகம் டக்ளஸ் தேவானந்த தெரிவித்துள்ளார்.

பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாகக் கருத்துக் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (வ)

# விதிக்கப்பட்ட நிபந்தனைகளை நூறு நாளுக்குள் நிறைவேற்ற வேண்டும்

## பொ.ஐ.முன்னணிக்குஹக்கீம் ஆதரவு

(கொழும்பு)

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளதாம், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிற்கு நிபந்தனையுடன் கூடிய ஆதரவை வழங்கி அரசமைக்க உதவவுள்ளோம்.

இவ்வாறு ஸ்ரீலங்ரகா முஸ்லீம் காங்கிரஸ் பி தித் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தேசிய ஐக்கிய முன்னணியும்முஸ்லிம் காங்கிரசும் அரசு அமைக்கப்படுவதை நிர்ணயிக்கும் சக்தியாக உள்ளது.

இலங்கையில் ஜனநாயகத்தைமீள நிலைநிறுத்தசுயாதீனமான தேர்தல் ஆணைக் குழு, ஒன்றையும் மற்றும் நீதிச்சேவைகள் ஆணைக் குழு பொலிஸ் ஆணைக்குழு போன்ற அமைப்புக்களை ஆட்சி அமைத்து நூறு நாட்களுக்குள் அமைக்க வேண்டுமென்ற நிபந்தனையையும் விதித்துஅரசுக்குஆதரவு அளிக்கத் தீர்மானித்துள்ளோம் என்று ரவூப்ஹக்கீம் தெரிவித்தார். (வ)

# புளொட்டின் மத்திய குழுகூடும்

(வவுனியா)

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தோல்வியைத் தழுவிக் கொண்ட புளொட் அமைப்பிூன் மத்தியகுழு அடுத்தவாரம் கொழும்பில் கூடி தோல்விக்கான காரணங்களைஆராயவுள்ளதாக புளொட் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

# பாராளுமன்றம் 18ஆம்திகதிகூடும்?

(கொழும்பு)

பதினோராவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் 18ஆம் திகதி கூடவுள்ளதாகத் தெரியவருகிறது.

# விருப்பு வாக்குகள்

(யாழ்ப்பாணம்)

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றவர்களின் விருப்பு வாக்குகள் விபரம்.

## வன்னி மாவட்டம்

**ரெலோ**

அமிர்தநாதன் அடைக்கலநாதன் 15490
சுப்பிரமணியம் நோகராதலிங்கம் 10959
இராசகுகனேஸ்வரன் 6739

**தே-ஐ-மு**

நுகர்தீன் மன்சூர் 12283

**ஐ தே.க**

பி. சாந்தகுமாரன் 3975

**பொ ஜ ஐ.மு**

பிறேமரத்தின சுமதிபாலா 5205

## யாழ். மாவட்டம்

**த.வி கூ**

வீ.ஆனந்தசங்கரி 12888
மாவை சேனாதிராசா 10965
எஸ்.சிவமகாராசா 7187

**ஈ.பி டி பி**

டக்ளஸ் தேவானந்தா 7658
மனோகராஜா 4673
குகேந்திரன் 4244
சங்கரன் 2902

**ஐ.தே.கா**

தி. மகேஸ்வரன் 4807

**அ இ.த.க**

அ. விநாயகமூர்த்தி 3825

(வ-12)

# சமுத்திரத் தீர்த்தத்திற்கு செல்ல பக்தர்களுக்கு அனுமதியில்லை

(வடமராட்சிகிழக்கு)

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார்ஆலயத்தில் நேற்றையதினம் இடம் பெற்ற சமுத்திர தீர்த்தத்திற்குச் செல்ல பக்தர்கள் எவருக்கும் படையினர் அனுமதி வழங்க மறுத்துவிட்டனர்.

வல்லிபுர ஆழ்வார் கடலில் தீர்த்தமாடும் நிகழ்விற்கு ஆலய அறங்காவலர்களுக்கும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினருக்குமே படையினர் அனுமதி வழங்கினர்.

இதனால் பக்தர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்ப நேர்ந்தது. (ந-43)

# யாழ்ப்பாணம்செல்ல பதிவுகளை மேற்கொள்ளவும்

(திருமலை)

திருமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கப்பலில் பயணம் செய்ய விரும்புவோர் தாமதமின்றி தமது பதிவுகளை மேற் கொள்ளுமாறு திருமலை மாவட்ட பிரதேச செயலர்வேலும் மயிலும் கேட்டுள்ளார்.

வடபகுதி நோக்கிய பயண அனுமதிக்காக பலர் காத்திருப்பதாலும், பதிவுகளை மேற் கொண்டவர்களின் புலனாய்வு அறிக்கைகள் கிடைப்பதிலுள்ள சிக்கல்களைத் தவிர்க்கும் முகமாகவும் இவ் வேண்டுகோளை அவர் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ-4-ந)

# ரத்வத்தையின் மகன் பொலிஸில் சரண்!

(கொழும்பு)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் மகன் பொலிசில் சரணடைந்துள்ளார்.

கண்டிப் பிரதிப் பொலிஸ்மா அதிபரை அச்சுறுத்தி அவரின் அலுவலகத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திய சம்பவம் தொடர்பாக அவர் கைது செய்யப்படலாம் என்ற காரணத்தாலேயே அவர் சட்டத்தரணி மூலம் பொலிசில் சரணடைந்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிமால் வெகிவத்த தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது;

நேற்று முன்தினம் கண்டி பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்திற்கு முன்னால் ஒரு குழுவினர் பெரும் அட்டகாச நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் பிரதிப் பொலிஸ்மா அதிபரையும் அச்சுறுத்தியுள்ளனர்.

இச் சம்பவத்தை அனுருத்தரத்வத்தையின் மகனே முன்னின்று நடத்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-2)

# 30 வருடங்களின் பின் காங்கிரஸிற்கு எம், பி பதவி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் முதன்மை வேட்பாளர் அப்பாப்பிள்ளை விநாயகமூர்த்தி யாழ். மாவட்டத்தின்பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் முப்பது ... பிரதிநிதி ஒருவருக்குபாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைத்துள்ளது.

1970 ஆம் ஆண்டிற்குப் பின் யாழ். மாவட்டத்தில் தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் எதனையும் பெற்றுக் ...

ரட்ணசிறி...

றுள்ளார்.

அப்போது திடீர் சுகயீனம் அடைந்திருந்த அமரர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிடம் இருந்து பிரதம அமைச்சு பொறுப்பை கடந்த ஆகட்ஸ்மாதம் ரட்ண ஸ்ரீ விக்கிரம நாயக்க பொறுப்பேற்றிருந்தார்.

நடந்து முடிந்த தேர்தலில் 107 ஆசனங்களை பொது ஜன ஐக்கிய முன்னணி பெற்றிருந்தமையால் புதிய அரசு அமைக்கும் படி ஜனாதிபதி ரட்ண ஸ்ரீ விக்கிரம நாயக்கவுக்கு அமைப்பு விடுத்திருந்தார். இதனை அடுத்து அவர் அலரி மாளிகையில் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண் ...

யாழ்-....

முல்லைத்தீவு என்பவரே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் படையினரால் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டவராவார்.

யாழ். பல்கலைக்கழகத்திற்கு வந்த படையினர் மேற்படி மாணவனை அழைத்து காலை 10.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை துணைவேந்தர் அலுவலகத்தில் வைத்து இவ் விசாரணை ...

ரெலோவிடம்...

மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்

★ வன்னிக்கான சகல பொருளாதாரத் தடைகளையும் நீக்க வேண்டும்.

இவ்வாறு ரெலோ விதித்த நான்கு நிபந்தனைகளுக்கும் ஜெயலத் ஜெயவர்த்தனா இணக்கம் தெரிவித்துள்ளதா ...

காலை 10.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை துணைவேந்தர் அலுவலகத்தில் வைத்து இவ் விசாரணையை மேற்கொண்டிருந்தனர்.

விசாரணை முடிந்ததும் யாழ். பல்கலைக்கழக ஆண்கள் தங்கியிருக்கும் பாலசிங்கம் விடுதிக்குச் சென்று குறித்த மாணவன் தங்கியிருக்கும் அறையினை பலத்த சோதனைக்கு உட்படுத்தியதாகவும் இதனால் பல்கலைக் கழக மாணவரிடையேநேற்று முழுநாளும் பதற்றம் நிலவியதாகவும் தெரியவருகிறது. (ந-12-4)

**புதிய...**

ளர்களோ உதவிப்பணிப்பாளருடன்தொடர்புகொள்ள லாமென்றும்;

புதியபாராளுமன்ற உறுப்பினர்களின் வசதி கருதி 17ஆம் திகதிவரை காலை 9.30மணி தொடக்கம் பிற்பகல் 4மணி வரை பாராளு மன்றத்தில் விசேட தகவல் நிலையம் செயற்படும்என்றும்,

பாராளுமன்றம்வரும் இவர்கள் தமது தேசிய அடையாள அட்டையையும் எடுத்து வர வேண்டுமென்றும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (வ)

இதனை அடுத்து அவர் அலரி மாளிகையில் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவ்வைபவத்தின் போது ஈழமக்கள் ஜன நாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம்தொண்டமான்,இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் இணைத் தலைவர் ரவூம்ஹக்கிம் மற்றும் பல அரசியல் கட்சித் தலைவர்களும், முனனாள் அமைச்சர்கள், மறைந்த அமைச்சர் அஷ்ரப்பின் புதல்வன் கமால் அஷ்ரப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பதினோராவது பாராளுமன்றத்தின் அமைச்சரவை இன்னும் இரண்டொரு தினங்களில் நியமிக்கப்பட்டுவிடுமென அரசவட்டாரங்கள் தெரிவித்துள்ள அதே வேளை இம்முறை அமச்சரவையில் பல புதிய முகங்களும், சிறுபான்மை இனமக்களின் சார்பில் அமைச்சரவையில் தமிழ்,முஸ்லிம் கட்சிகளின் உறுப்பினர்கள் இடம்பெறுவரெனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (வ)

இவ்வாறு ரெலோ விதித்த நான்கு நிபந்தனைகளுக்கும் ஜெயலத் ஜெயவர்த்தனா இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் நிபந்தனையுடன் கூடிய ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்குவது தொடர்பாக மத்தியகுழு விரைவில் கூடி முடிவு செய்யுமென ரெலோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

**கணவனின்...**

சமாதிக்கருகில் அடக்கம் செய்ய வேண்டும் என்ற ஸ்ரீமாவோவின் இறுதி வேண்டு கோளை அடுத்தே ஹொரகொல்லையில் உள்ள பண்டாரநாயக்காவின் சமாதிக்கருகில் அடக்கம் செய்யப்படவுள்ளது

நல்லடக்கம் செய்யப்படவுள்ள இறுதி நாளான இன்று தேசிய துக்க தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. (வ)

**அதி கூடிய...**

கள் கிடைத்துள்ளன.

அகில இலங்கையில் அதிகூடிய விருப்பு வாக்குகள் சஜித் பிறேமதாஸாவுக்கே கிடைத்துள்ளது. (ந(

**புனர்வாழ்வு...**

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் பதவியை டக்ளஸிடம் வழங்க ஜனாதிபதி முடிவு செய்துள்ளதாகவும் தெரியவருகிறது. (ந)

பாளர் அப்பாப்பிள்ளை விநாயகமூர்த்தி யாழ். மாவட்டத்தின்பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் முப்பது ஆண்டுகளின் பின் யாழ். மாவட்டத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் 1970 ஆம் ஆண்டிற்குப் பின் யாழ். மாவட்டத்தில் தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது- (ந)

## முஸ்லிம் காங்கிரசில்
# இருவருக்கு அமைச்சர் பதவி
# மூவருக்கு பிரதியமைச்சர் பதவி?

முஸ்லிம் காங்கிரசைச்சேர்ந்த இரண்டு உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவியும், மூவருக்குப் பிரதி அமைச்சர் பதவியும் வழங்க ஜனாதிபதி உடன்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனடிப்படையிலேயே முஸ்லிம் காங்கிரஸ் பொது ஜன ஐக்கிய முன்னணிக்குஆதரவு வழங்க முன் வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளை தேசிய ஐக்கியமுன்னணியின்சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட முன்னாள் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா தேர்தலில் தோல்வியடைந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது; (ந)

# அமைச்சர் பதவிக்காக
# பா.உ. பதவியை விற்கப்போவதில்லல

[கொழும்பு)

பொதுத்தேர்தல் வெற்றிமெற்று அட்சி அமைக்கவுள்ள அரசாங்கம், மக்களின் நலன்களுக்கு எதிராக சொற்படுமாயின் மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி] அதற்கி எதிராக செயற்படும்

இவ்வாறு கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் அக்கட்சியின்தலைர் 'டில்வின் ெல்ரிவித்துள்ளாற.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற தேர்தல் நிதியான முறையில் நடைபெற்றதொன்றல்ல கண்டி, நுவரெலியா,யாழ்ப்பாணப், அனுராதபுரம் உட்பட பல மாவட்டங்களில் தேர்தல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. (4

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.